# ஆகஸ்ட் 23உ ஆரம்பம்

# மகாத்மா காந்தி

— (அவரது வாழ்க்கையின் சம்பவங்கள்) —

## முழுநீளமுள்ள தமிழ் சினிமாப் படம்

ஸ்ரீமதி D. K. பட்டம்மாள், C. ராஜரத்தினம்,
சூர்யகுமாரி, பாய்சுந்தராபாய்,
முதலியோரின்
பின்னணி சங்கீதம்

OF ... OCT 1940

| | | |
|---|---|---|
| சென்னை | — | ராக்ஸி |
| மதுரை | — | சிட்டி சினிமா |
| கோயமுத்தூர் | — | லக்ஷ்மி |
| காரைக்குடி | — | நடராஜா |
| திருநெல்வேலி | — | ராயல் |

ஏக காலத்தில் ...ம்

விவரங்களுக்கு ...

THE DOCUMENTARY ...
77, Lloyds Road, Roya...

*Phone : 86155.*

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.

| மலர் | விக்ரம ஸூ ஆவணி மீ | இதழ் |
|---|---|---|
| 17 | செப்டம்பர் **1940** | 9 |


தவளிஹம்ஸி ராகம். திரிபுடை-தாளம்.

பல்லவி

வேகப்ரோவ ராரா வேணுகான லோலா
வனருஹ லோசன தயஜேஸி நன்னு (வே)

அநுபல்லவி

மேகவர்ண ககவாஹன ரூபுடை
...கரக்ஷக புன்னக சயன நன்னு. (வே)

சரணம்

பாலுடை... ப்ரஹ்லாதுனிப்ரோசி
சீலுடை... த்ருவசிம்தன நீர்சி
மேலின் ...ஜராஜ...னி காசின
பாலக்...ஷண கோதா ப்ராணபதி நன்னு. (வே)

...கீர்த்தனை "சுகந்தபுஷ்பம்" 74-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது
ஸ்வரத்திற்கு உள்ளே 15-வது பக்கம் பார்க்கவும்.

## ஓர் விசேஷ அறிக்கை

...ன மஹோத்ஸவத்தை முன்னிட்டு, ஆங்காங்கு
...பாரதி பாடல்கள் முதலிய போட்டிகளும்
...ன்ற நம்பிக்கையுடன் இருக்கும் நாங்கள்,
...ன்பர்களுக்குப் பரிசுகளாக ஸ்ரீ பாரதி நூல்
..., அந்தந்த சங்கங்களுக்கு மாத்திரம், விபரம்
...காரும் நூல்களைப் பாதி விலையில் கொடுப்ப
...ன்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளு
...ஏற்றுக்கொள்வார்களாக.

...தி பிரசுராலயம்,
...திருவல்லிக்கேணி, சென்னை.

# காந்தி பைத்தியம்

183045

வை. மு. கோதைநாயகி.

உலகத்தில் அநேகவிதமான பைத்தியங்கள் உண்டு. அவைகளில் 'காந்தி பைத்தியம்' என்ற ஒரு புதுமைக் கூட்டத்தைச் சில வருஷங்களாக நாம் நம் நாட்டில் பிரத்யக்ஷமாகப் பார்ப்பதைத் தவிர, வெளிநாடுகளிலும் இருப்பதை அறிந்து ஆச்சரியப்படுகிறோம். அத்தகைய காந்தி பைத்தியத்தில் நானும் ஒருத்தி என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும், பெரியார்களின் பெயராலும் எந்த காரியத்தைச் செய்வதாயினும் எத்தகைய உத்ஸாகமும் சந்தோஷமும் உண்டாகிறதோ, அதேபோல் தேசீய விஷயமாக எத்தகைய சேவையும் செய்யத் தயாராகவிருக்கும் எனக்குத் திடீரென்று ஒருநாள், "காந்தியின் படத்தில் உங்கள் குரல் வேண்டுமாம்; இதுவும் ஓர் முக்கியமான தேசசேவை என்பதில் ஆக்ஷேபணையே இல்லையாகையால் ஒப்புக்கொள்ளவேண்டும்" என்று காந்தி பைத்தியங்கொண்ட ஒரு நண்பர் எழுதிய கடிதத்தைப் படித்ததும் நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

பிறகு குதூகலத்துடன் பம்பாய் போய்ச் சேர்ந்தோம். டாகுமெண்டரி பிலிம்ஸ் நிர்வாகஸ்தர் வெகு மரியாதையாய் வரவேற்று உபசரித்தார். அவர் செய்திருந்த ஏற்பாடுகளும், விசாரித்த அன்பும், கவனித்து நடத்திய பெருந்தன்மையும் கூறவே முடியாது. அவ்வளவு சௌகரியங்களைச் செய்ததற்கு நான் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பம்பாய் சென்ற மறுதினமே படத்தைப் பார்க்க ஏற்பாடு செய்தார்கள். 'மகாத்மா காந்தி படமென்றால் அது என்ன...எப்படியிருக்கும்?' என்றெல்லாம் என் மனத்தில் யோசனை செய்துகொண்டே இருந்தேன். படத்தைப் பார்க்கும்போது உண்மையில் எனக்குண்டாகிய வியப்பிற்கு ஓர் எல்லையே இல்லை. படத்தைப் பார்க்கப் பார்க்க வியப்பெல்லாம் பிரமிப்பாக மாறியது. சில இடங்களில் அது ஒரு திரையில் காணும் சம்பவம் என்று தோன்றாது உண்மையாக நேரில் அப்போதுதான் நடப்பது போன்ற உணர்ச்சியின் மிகுதியால் என்னையே நான் மறந்துவிட்டேன்.

மகாத்மாவின் தாண்டியாத்திரைத் திருக்கோலத்தை பல புகைப் படங்களில் கண்டிருக்கிறோம். விஷயத்தைப் படித்திருக்கிறோம். ஆனால் அங்கு அத்திருக்கோலத்தை நேரில் காணும்போது அடடா! எழுத்தினால் அந்தக் காட்சியை எழுதமுடியுமா! அந்த முகத்தின் தோற்றத்தில் எத்தனைவிதமான உணர்ச்சிகள் ஜ்வாலை வீசி மக்களைப் பரவசமுறச் செய்கின்றன. அந்த வயதில் அவர் ஓடுகிற ஓட்டமும், அவரைத் தொடர்ந்து தொண்டர்கள் செல்லும் பேரானந்தமும் உள்ளத்தை உருக்கியது. இது போன்ற பல சந்தர்ப்பங்கள் அபாரமான எழிலுடன் அமைந்திருப்பதைப் பார்த்ததும், இந்தப் படம் எடுப்ப

வர்கள் சாதாரணப்பட்டவர்களல்ல; கைதேர்ந்து மாலே கட்டும் நிபுணர்களின் வகையில் சேர்ந்தவர்கள் என்றுதான் தோன்றியது.

ஏனெனில் சுமார் 20 வருடங்களுக்குமேலிருந்து இன்று வரையில் உள்ள தேசிய விஷயங்களே, அவ்வப்போது எடுத்தவைகளை ஒழுங்குபடுத்தித் தொடர்ச்சி குன்ருது, ருசி குறையாமல் விரு விருப்பு மாருமல் ஒரு முழுச் சித்திரமாகச் சேர்த்து வைத்திருப்பதானது, நந்தவனத்திலுள்ள பல தினுசான புஷ்பங்களேயும் பறித்து கும்பலாகக் கொட்டிவிட்டதினின்று அழகான மலர்களே ரகம் வாரியாகப் பொறுக்கி ஒன்றுகூட்டி அருமையான மாலே கட்டியது போல் இருந்தது. புஷ்பங்களேப் பறித்துவிடுவது சுலபம்; அவற்றைப் பரிமளிக்கும்படி கதம்பமாலே கட்டுவது ச்ரமமல்லவா?...

சாதாரணமாக, நம்முடைய மூதாதையர்களேப் புகைப்படம் எடுக்காதிருந்தால், "ஐயோ! ஒரு படமாவது எடுத்திருந்தால் பார்த்து மகிழலாமே!" என்று நாம் சகஜமாக நினைக்கிறேம். உயிருடன் இருக்கும்போது சரியாக சம்ரக்ஷிக்காதவர்கள் கூட ஒரு சமயம் மேற்குறித்தபடி நினைப்பது இயல்பு. ஒரு மந்திரக்காரன், "மை போட்டு இறந்தவர்களேக் காட்டுகிறேன்" என்று கூறும்போதே ஒரு உத்ஸாகம் பிறக்கிறது. அந்த உத்ஸாகத்தின் வேகத்தில் இறந்தவர்கள் கண்முன்பு தெரிவதுபோலவே ஒரு தோற்றமும் சிலருக்கு உண்டாகிக் களிக்கிருர்கள். அவர்கள் பேசவும் பேசிவிட்டால் கேட்கவேண்டுமா! அதற்கே அப்படியிருக்கும்போது, ஸ்வராஜ்ய மூலமந்திரத்தை உபதேசித்து அதை அடைவதற்குப் பல துறைகளிலும் அருமையாய் வழியும் காட்டிப் பின் உயிர்நீத்த பல த்யாக மூர்த்திகளேப் படத்தில் பார்க்கும்போது, உண்மையில் நாம் பூலோகத்தில் இருக்கிறேமா! ஸ்வர்க்கத்தில்தானிருக்கிறேமா!" என்ற நினைப்புடன் கண்ணீர் பெருகிவிட்டது. மயிர்ச்சிலிர்த்தது. அன்று அழகுக் குன்றமாய், தேசிய அரண்மனேயாய் விளங்கிக் காக்ஷி கொடுத்த நம் சென்னே காங்கிரஸ் மாளிகையை—இன்று நம் கண் முன்பு பரிதாபக் காக்ஷியாகத் தோன்றி கண்ணீரை உதிர்க்கச் செய்யும் அதே மாளிகையை—பழய அலங்காரத்துடன் படத்தில் பார்க்கும்போது உண்டாகிய உணர்ச்சியை நீங்களும் அனுபவித்தால்தான் தெரியும்.

நான்கைந்து தரம் படத்தைப்பார்த்து மகிழ்ந்தேன். படத்தில் சில பாகங்களே விமர்சனம் செய்வதற்கு, 'ஸ்டுடியோவிற்குப் போகும் முன்பு, "ஸ்டுடியோ எப்படியிருக்குமோ! சினிமாக் காரர்கள் யாரிருப்பார்களோ!" என்று ஒரு நினைப்பு மனத்தில் உலாவிக்கொண்டே இருந்தது. நல்ல வேளேயாக ஸ்டுடியோவின் சினிமா வேலே முடிந்த பிறகு, இரவில் தனியாக இந்த வேலேயை வைத்துக் கொண்டார்கள். அந்தப் படத்தில் சம்மந்தப்பட்ட ஒவ்வொருவரும் வெகு அன்புடனும், மரியாதையுடனும் ஒத்துழைத்து விமர்சனத்தை ஒலிப்பதிவு செய்ததானது மிகவும் போற்றத்தக்கதாகும்.

*விமர்சனத்தைப் படிக்கும்போது "தேச சேவையில் இதுவும் ஒரு பங்கு. இது வெறும் வசனமல்ல; தேசியபுராணம். இதைப் படிக்கும் நீ நாளை இறக்கலாம். ஆனால் இந்த குரல்....இந்த வாக்யம், இந்தக் காக்ஷி என்றும் சாச்வதமாய் தேசத்தொண்டாற்றி உயிருடன் உலாவும். பதினாயிரக்கணக்கான ஜனங்களின் முன்பு மகாத்மாவைப்பற்றி எத்தனையோ தரம் பேசியிருந்தபோதிலும் அது காதுக்கு மட்டுந்தான் உணர்ச்சி யளித்தது. இது கண்ணுக்கும், கருத்துக்கும், காதுக்கும், மனத்துக்கும் ஏக காலத்தில் உணர்ச்சி யளித்துத் தன் சேவையை செய்யும். ஆகையால் பயப்படாதே"... என்று என்னிதயத்தில் ஏதோ ஒன்று சொல்லி என்னை ஊக்கியது. விமர்சனத்தைப் படிக்கும்போது நானும், அதைக் கேட்கும் என் பர்த்தாவும் உண்மையில் உள்ளம் பூரித்தோம்.*

*மகாத்மாவின் படத்தை உருவகப்படுத்தி உலகிற்கு உபகாரமாக அளித்த டாகுமெண்டரி பிலிம்ஸ் நிர்வாகஸ்தர்களை ஓர் பெரிய தேசசேவை செய்தவர்களாகவே போற்றுகின்றேன்.*

*மகாத்மா நீடூழி வாழ்க. அவருடைய லக்ஷ்யம் பரிபூர்ணமாய் வெற்றியடைய எல்லாம்வல்ல பாரதமாதா அருள்புரிவாளாக.*

---

# உலகில் உண்டா?

(11) பேயிக்குப் பயப்படாத பெண்ணும் நோயிக்கு அகப்படாத மனிதரும் உலகில் உண்டா!

(12) கடனுக்கு அஞ்சாத ப்ரக்ருதியும் விஷத்திற்கு நடுங்காத உள்ளமும் உண்டா!

(13) இரவல் உடை உடுக்காத வண்ணானும் இரவல் நகை போடாத தட்டானும் உண்டா!

(14) தளுக்கு மினுக்காத தேவடியாளும் தவிடு தின்னாத மாடும் உண்டா!

(15) பட்டினிக்கு அஞ்சாத பரதேசியும் பட்டணம் சுத்தாத தகல் பாஜியும் உண்டா!

(16) பொறுமையில்லாப் பங்காளியும் புதுமோகமில்லாத மணப் பிள்ளையும் உண்டா!

(17) ஆத்திர மனிதனுக்கு அமைதியும் அவலக்ஷண முகத்திற்கு அழகும் உண்டா!

(18) சிடுமூஞ்சி மனிதருக்குச் சிரிப்பும் சீர்கெட்ட பெண்ணுக்குச் சுகமும் உண்டா!

(19) சந்தேகப் பேர்வழிக்குத் தூக்கமும் சபலபுத்திக்கு விரக்தியும் உண்டா!

வை. மு. கோ.



# வனிதா மண்டலம்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

பிறகு பனஸ்வாடி என்கிற இடத்தில் ஸ்ரீநிவாஸர் கோவில் இருப்பதை யறிந்து அங்கு சென்றோம். அந்த கோவில் நம் தென்னிந்திய பக்தர்களால் சில வருஷங்களுக்குமுன்புதான் தென்னிந்தியாவின் கோவில்களைப்போலவே கட்டப்பட்டது. சகல ஏற்பாடுகளும் நம்மபக்கத்தைப்போலவே இருந்தன. ஸ்ரீநிவாசப் பெருமாள், ஸ்ரீராமர், அம்மன் முதலிய எல்லோரும் வெகு அழகா யெழுந்தருளியிருக்கிறார்கள்; சேவித்தோம். அன்று உடையவர் உத்ஸவமாம். நம் கோயிலைப்போல் புறப்பாடு, சேவை, சாத்துமுறை, வினியோகம் முதலியன இருந்தன. அங்கும் அந்த தேசத்து ஜனங்கள் ஏராளமாக வந்து சேவித்துப் பெரிய ஆதரவும் கொடுக்கிறார்களாம்.

க:—அப்படியா! பம்பாய் திருப்பதியா அது?

ம:—ஆமாம். அப்படியும் சொல்லலாம்...பிறகு மியூஸியம் பார்த்தோம். அந்த மியூஸியத்தில் மிருகங்களும், பறவைகளும் இயற்கையாக இருப்பதுபோல் செயற்கையினால் மின்சார உதவி கொண்டு செய்துவைத்திருப்பதுதான் மிகவும் நன்றாயிருந்தது. சித்திரக்கலா மண்டபத்தில் சில பண்டங்கள் வெகு அழகாயிருந்தன. அந்தப் படங்களின் விவரத்தைக்கூட உனக்காக எழுதிக் கொண்டு வந்தேன். அது எங்கேயோ கெட்டுப்போய்விட்டது. எத்தனையோ ஆயிரம் வருஷத்திய சாமான்கள் இருக்கின்றன.

கல்:—அதெல்லாம்தான் நம்ப ஊரில்கூட இருக்கிறதே. அது மாதிரிதானே...வேறு என்ன அதிசயம் பார்த்தாய்? என்னென்ன சாமான்கள் நயமாயிருக்கும்?

மங்:—அப்பப்ப! சில சாமான்களின் விலை ஒன்றுக்கு நாலாகத்தான் இருக்கு. நம்ம ஊரில் தம்பிடி எப்படியோ, அப்படித்தான் அங்கு காலணா மதிக்கப்படுகிறது. பிச்சைக்காரன்கூட தம்பிடி வாங்கமாட்டேன் என்கிறான். தம்பிடி சாமான்களே கிடையாது. கரிகாய்களின் விலையும் அநியாயந்தான். ஸில்கு வகையராக்கள், தகிடி வகையராக்கள், மில் புடவைகள் இவைபோன்ற சாமான்கள் நம்ம ஊரைவிட மலிவுதான். சரிகைத் தகிடி தினுசுகள் நான் வாங்கி வந்தேன் பாரு. அதே ரகத்தை இந்த ஊர் கடையில் விசாரித்ததில் அடேயப்பா! ரெண்டுபங்கு விலை சொன்னான். இந்த சாமான்களைத்தவிர மற்ற எல்லாம் நம்மூரைப்போலத்தான் இருக்கு...பசுவின்பால் கிடைப்பதே துர்லபம். முதலில் சொல்லிவைக்காது போனால் திடீரென்று வந்தவர்களுக்குப் பாலே கிடையாதாம். இன்

ஞெரு அதிசயம் கேட்டயா! நம்ம ஊரில் இடறிவிழுந்தால் காப்பி ஓட்டல், சோடாவாட்டர் என்பதேபோல் கடையும் ஓட்டலும் ஜோடியாகவிருக்கிறதே. அங்கு ஓட்டல்மட்டும் ஏராளமாயிருக்கிறது. ஆனால் சோடாக்கடை அம்மாதிரி அதிகமே இல்லை. எங்கோ சில இருக்கின்றன. அதற்குப் பதில் தெருவுக்குத் தெருவு கரும்புச்சாறு பிழிந்து விற்கிறார்கள். நம்மூரைப்போல் ஏராளமாய் புஷ்பம் அகப்படுவதே கிடையாது. ரோஜா மட்டும் கலர் கலராகவிருக்கின்றன. ஆனல் அது கனகாம்பரத்திற்குத் துணையாய் காகிதபுஷ்பம் போலிருக்கிறது. அழகுக்குத்தான் புஷ்பம்; ரோஜாவின் வாசனை மருந்துக்குமில்லை. ஐஸ்க்ரீம், மசாலாதூத் (சாம்பார்ப் பால்) இவைகள் மட்டும் நன்ருயிருக்கின்றன. வளையல் கடைகளோ கணக்கே இல்லை. அங்கு கூட்டமும் கால்வைக்க இடமில்லை.

க:—உனக்குதான் ஹிந்திபாஷை தெரியாதே. அவர்களுடன் எப்படிப் பேசி பேரம் செய்தாய்?

ம:—அந்த வேடிக்கையை ஏன் கேட்கிருய்? எங்களுக்குத் தெரிந்தவர்களைக்கூட அழைத்துக்கொண்டுதான் போவோம். சில சமயம் தனியாயும் போவோம். அப்போதெல்லாம் உன்னை நினைத்துக்கொண்டேன்.

க:—என்னையா! எதற்காக?

ம:—ஒரு கடைக்கு நம்மபக்கத்து சிநேகிதைகளுடன் போனேன். அது வளையல் கடை "யஹ் சுடியா கித்ண தாம் ஹை" என்று அவள் கேட்டாள். ஆத்தரிபாஜா கதையைப்போல் அந்த வார்த்தையை அப்படியே கற்றுக்கொண்டேன். இந்த வளையல் என்ன விலை என்று அதற்கு அர்த்தம் என்றும் அறிந்தேன். "ஏக் ரூப்யா ஏக்" என்ருன். அது முத்துவளையல். ஒரு ரூபாயிக்கு ஒரு வளையல் என்றதும் அடேயப்பா! என்று நான் சிரித்தேன். "க்யாமாயி என்ருன்...க்யாவுமில்லை. க்யூவுமில்லை. ஏகப்பட்ட வெலைசொல்றயேடாபாவி" என்றேன். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. "க்யா போல்தீ மாயி...க்யாஹோ! சாயியெ"....என்ருன்.

"ஒனுயுமில்லே. ஆட்டுக்கடாவுமில்லே. போ! கால் ரூபா ஒன்னு குடுப்பயா!" என்றேன்...பாஷை தெரியாத மணிப்ரவாள நடையில் பேச்சு நடக்கும்போது நாங்கள் சிரித்து வயிறு உப்பிவிட்டது. சுமாராகப் பேச இரண்டொரு வார்த்தைகள் கற்றுக்கொண்டோம். இங்கிலீஷ்தான் ஒன்று உலாவுகிறதே! அதை என் பர்த்தா உபயோகிப்பார். எப்படியோ சமாளித்துவிட்டோம். எங்களுக்குத் தெரிந்த மட்டில் ஊரை முற்றிலும் பார்த்தோம். இன்னும் பார்க்காத இடமும் எத்தனையோ விட்டுப்போய்விட்டன. நம்ப பக்கத்து ஹோட்டல்களுக்குக் கணக்கே இல்லை...

இன்னும் ஒன்று எனக்கு மிகவும் பிடித்தது. அதாவது பொது ஜனங்களின் நன்மைக்காகவும், சௌகரியத்திற்காகவும், ட்ராம்கார்

பஸ் முதலியன நிற்குமிடத்தில் வெய்யிலிலும், மழையிலும் ஜனங்கள் கஷ்டப்படாது நிற்பதற்காக ஆங்காங்கே ஷெட்டுகள் கட்டியிருப்பது போற்றத்தக்கது. நம்ம ஊரிலுந்தான் வண்டிகளுக்கோ ஜனங்களுக்கோ பஞ்சமில்லை. அம்மாதிரி சௌகரியம் உண்டா! ஜெனரல் ஆஸ்பத்திரியருகில் ஒன்று இருக்கிறது. வேறு எங்கும் நான் பார்க்கவில்லை. முக்யமாக வெளியூர்களுக்குப்போகும் பஸ்ஸுக்கள் பிராட்வே முனையில் நிற்கிறதே அங்கு ஜனங்களுக்கு ஏதாவது சௌகரியம் உண்டா? வெயிலிலும் தத்தளித்துச் சாகவேண்டும். மழையிலும் நனைந்து நாசமடையவேண்டும். இதற்கு நகரசபை யாரும் சர்க்காரும் ஏன் ஒரு ஏற்பாடு செய்யக்கூடாது என்று நான் அந்தப் பக்கத்தைப் பார்க்கும் போதெல்லாம் நினைப்பதுண்டு.

அங்கு தெருக்கள் எப்படி யிருக்கு தெரியுமா! மண் என்பதே இல்லை. வீட்டுத் தரையைப்போல் சுத்தமாயிருக்கிறது. கோலம்போட்டு அழகு பார்க்கலாம். ஆனல் அதற்கு இடமேது. எச்சத்தம்பலத்தின் விகாரம் அங்கு நிறைந்து கிடக்கிறது. இன்னொரு முக்யமாய்ப் போற்றக் கூடியது என்ன தெரியுமா! ஒவ்வொரு தெருவிலும் 4 அடுக்கு மெத்தைக்குக் குறைந்த கட்டிடமே கிடையாது. ஐந்து, ஆறு அடுக்குகள்கூட சிலகட்டிடங்கள் இருக்கு. ஒவ்வொரு மெத்தையிலும் குடித்தனமிருக்கிறர்கள். மின்சார வசதியும் செய்திருக்கிறர்களே! அதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம். ஒரு நிமிடம் கூட நிற்காது குழாய் வரும்படி ஏற்பாடு செய்திருக்கிறர்கள். அத்தனை ஜனங்களுக்கும் தண்ணீர் கஷ்டமே இல்லை. அதேபோல் லட்ரீன் சௌகரியமும் இருக்கிறது. மேல் மாடியிலும் தண்ணீர் கொட்டுகிறதென்றல் கேட்கவேண்டுமா! நம்ப ஊரில் ஆச்சோ போச்சோ என்று தண்ணீர் பிடித்து வைக்காவிட்டால் திண்டாடுகிறேமே. அங்கு பார்க்கும் போது, வீட்டுக்கு வீடு ஏன் இங்கும் அம்மாதிரி செய்யக்கூடாது என்று தோன்றியது.

க:—மங்களம்! மணியைப் பார்த்தாயா! 5 அடிக்கப்போகிறது. கையிலிருந்த பஞ்சும் நூற்றுமுடிந்துவிட்டது. பள்ளிக்கூடப் பசங்கள் வந்து விடுவார்கள். மிச்சமிருந்தால் நாளை வைத்துக்கொள்ளலாம்...நான் வரட்டுமா!

ம:—இரு. இரு. குங்குமம் இட்டுக்கொண்டு போ...


## ஒரு ரூபாய்க்கு 3 நாவல்கள்

| | |
|---|---|
| உலுத்த இதயம் | தனி விலை ரூ 1-6-0. |
| மகிழ்ச்சி உதயம் | ரூ. 1. முன்பண மனுப்பினல் |
| வத்ஸகுமார் | தபாற் செலவு இனம் |




1. சிக்சனம் பிடிக்க ஆசைப்படும் அதே சமயம் பாத்திரத்துடன் நெய் தவறிக் கீழே கொட்டிவிடுகிறது. இதை சோதனை என்பதா! புத்தி போதனை என்பதா!

2. பிறரிடம் வாயைக் கிளறிச் சோதனை செய்வதே சில குண்டுணிகளின் செய்கை போலும். அத்தகையோர்தான் மேலுக்குத் தேன்போல் பேசி மழுப்பி, உள்ளுக்குள் தேள் போல் கொட்டுவார்கள்.

3. அங்கு சொல்வதை இங்கும், இங்கு சொல்வதை அங்கும் முடியிடுவதே சிலர் ஆத்மார்த்தகமான செய்கை என்று எண்ணிச் செய்கிறார்கள். அதன் பலனால் தன் பெயர் கெடுவதையும், தன் விஷயம் தெரிந்த பின்னர் வெறுப்பதும் இப்போது தெரியுமா?

4. வினா:—அல்ப குணத்தின் மகிமையால் மனிதர்கள் என்னென்ன பேசுவார்கள்? செய்வார்கள்?

விடை:—இதைக்கூடக் கேட்கவேண்டுமா! அல்பர்களின் நாக்கிற்கு நாணயமேது? செய்யாததைச் செய்ததாகப் பெருமை பேசுவார்கள். கல்யாணப் பந்தலில் எஜமானன் பகுமானம் கொடுத்ததை வாங்கி அமுக்கமாக வைத்துக்கொண்டு பிறகு 'பகுமானமே கொடுக்கவில்லை; சம்பளத்தில் பிடித்துக்கொண்டார்' என்று வாய் கூசாது, தன் மதிப்பிழந்து அல்பத்தனமாய்ப் பேசச்செய்யும். வாங்கிக்கொண்ட எந்த பொருளையும் இல்லை என்று சொல்லச் செய்யும். தன் ஒழுங்கீனத்தை மறந்து பிறர்மீது குறைகூறச் செய்யும். பெற்றோரையும், கட்டிய மனைவி மக்களையும் நெஞ்சு துணிந்து உதாசீனம் செய்து வெறுக்கச் செய்யும். கொடுத்ததை யெல்லாம் தின்று விட்டுக் கொடுக்கவே இல்லை என்று சொல்லத் தெரியும். அசட்டுத்தனமாக பிகுவு செய்யவும், குறை கூறவும், கலகத்தை உண்டாக்கவும், விரோதித்தவர்களிடம் உறவாடவும், உறவாடியவர்களை விரோதிக்கவும், நன்றாகத் தெரியும். இதுபோல் ஆயிரம் இருக்கு சார்!

5. உன்னைப்பற்றி உன்னெதிரிலேயே யார் அதிகமாகத் தோத்திரம் செய்து பேசுகிறார்களோ, அவர்களிடம் நீ வெகு உஷாராயிரு. உண்மையில் உன்னைப் புகழ்ந்து உன்னிடம் நல்லபிப்ராயமும், உன் நன்மையைத் தேடுவதாயுமிருப்பவர்கள் உன்னெதிரில் புகழமாட்டார்கள். இதுதான் ஒழுங்கின் ரகஸ்யம். உண்மையின் நம்பிக்கை.

6. தான் தான் ஸர்வக்ஞன் என்று கர்வப்படும் யாரும் தன் தலையில் தான் மண்ணைப்போட்டுக் கொள்கிறதற் கொப்பாகும். தனக்கும் மேல் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் என்று நினைப்பவர்கள்தான் மேற் படிகளில் ஏற முடியும்.

7. பிள்ளையின் பவிஷு தெரிந்திருந்தும் காலவிதியால் மத்தியிலிருக்கும் ஸ்திதியைக் கண்டு புத்திதடுமாறிப் பெண்ணைக் கொடுத்துவிட்டுப் பிறகு பெற்றோர்கள் வருந்துவதும், அப்பெண் கண்ணீர் விடுவதும் பயனென்ன? நாத்தத்தின் மீது எத்தனை வாசனையைப் பூசினாலும் வாசனையும் நாற்றமாகவல்லவோ முடியும்?



# பாட்டியின் பரிபாஷை

எங்கப்பாட்டிகளின் பரிபாஷையில் ஆங்கிலப் பதங்கள் மட்டுந்தான் கொச்சையாகவும், விநோதமாகவும் வருவதாக நினைக்க வேண்டாம். தம் சொந்தமான தாய்ப்பாஷையைப் பேசும்போது கூட எத்தனைவிதமான அலங்காரங்களுடன் உச்சரிப்பார்கள் தெரியுமா! தெலுங்கு, தமிழ், கன்னடம் முதலிய பாஷைகளும் அவர்களிடம் சக்கையாக அடிபடும். பேச்சில் அவர்கள் கண்ட ருசியின் மகிமை வேறு ஒன்றிலும் காணவே இல்லை. ஆனால் பேச்சின் ஸ்வாரஸ்யத்தில்கூட தங்களுடைய கடமைகளை மறக்காது, இலைதைப்பது, பஞ்சு திரி திரிப்பது, கரிநெறுக்குவது, சர்க்காவில் நூல் நூற்பது முதலிய தம் தம் சக்திக்குத் தக்க காரியங்களையும் செய்து முடிப்பதுதான் அதிசயத்திலும் அதிசயம். பகல் 11 மணியானவுடனே "சாப்பாடு முடிந்ததா! என்ன சமயல்?"...என்ற சம்பிரதாய வசனத்துடன் கூட்டம் ஆரம்பமாகும்.

திங்காணம் :—சாப்பாடு ஆச்சோ! என்ன சமையல்?

சானு :—எங்க பெரிய போத்தியின் மேச்சினர் ஊர்லேந்து வெந்திருக்கேர். அவேர், (அவர்) நன்னா சாப்படக்கூடிய மனுஷன் அதனாலே, பேண்டக்காபோட்டு பேருப்பு கோழம்பும் கேல்லாண பூஷிணிக்கா கூட்டும், போள்ளங்கா, (புடலங்காய்) போருச்சு கருமந்தும், கேத்தேரிக்கா தெயிர் பேச்சடியும், தேங்கா சேட்டிணியும், வாழக்கா வரலும், பண்ணினா. சமையல் எப்படி இருந்துதுண்ரே வெஷ்ட்ளாஸா இருந்துது.

எச்சி:—இத்தனே ஐட்டன்கள், (ஐடம்ஸ்) பண்ணிட்டு ஸ்பீட்டு (ஸ்வீட்டு) சாவேரி (ஸேவரி) ஒண்ணுமில்லையா?

சானு :—ஐயோ! அத்தெச் சொல்ல மறந்துபூட்டேனா. கேல்குண்டுபோட்டு பாதாம்கீரே, (கீர்) நோக்கள், (நுக்கல்) பொட்டாடே, (பொட்டேடோ) வடை எல்லாம் பண்ணா, தீமா, (திவ்யமா) யிருந்துது.

திங்:—ஆமாம். அவருக்குகூட கெல்லாணத்துக்குப் பொண்ணு இருக்குதுன்னியே! கெல்லாணம் ஆய்போச்சோ?

சானு :—இன்னும் இல்லே...அவேர் இன்ன செய்யப்போறாராம் தெரியுமா! பொண்ணே பொட்டாக்ராப், (போட்டோ) புடிச்சி நூஸ்பேப்பர்லே போட்டு அட்டிட்டீஷன் (அட்வர்டைஸ்மெண்டு)

பண்ணப் போறரும், அதெப்பாத்து எகப்பட்டச் சைன்ஸ் (சான்ஸ்) வரன் வருமாம். இது ஒரு புதுமாதிரியாமே.

குட்டிப்பாட்டி :—இதென்னடியம்மா அதிசயமாயிருக்கே, பேப்பர்லே போட்டுக்கூடவா கல்யாணம் பண்றது!

எச்சி :—இந்த காலத்தின், நூ பாஷன், (நியூபேஷன்) எங் காத்து புள்ளேகூட இந்தமாதிரிதான் பண்ணனும்னு சொல்லிண் டிருக்கான். அதுக்காக அவனுடைய பெண்சுகளோடே கரஸ்பான்ஸ் (கரெஸ்பாண்டென்ஸ்) நடத்தரான். என்ன செய்யறது?

திங் :—எல்லாம் விசித்திரமா இருக்குது. நேத்து ஒரு வரன் வந்துது. பெய்யன் இன்ஸூரன்ஸ், (இன்ஷ்யூரன்ஸ்) கம்பெனிலே க்ளாக்கு, (க்ளார்க்கு) வேலெ பண்ரானும். அழகாயிருக்கான். 30 ரூபா சம்பளமாம். அவனுக்கு எம்போத்தியே குடுக்கலாம்னு எங்க மெருமான், (மருமான்) சொல்றுன். ஆனு அந்த புள்ளே யோடே தங்கெ பயாஸ்கோல் (பயாஸ்கோப்) டாக்கி இல்லே அதுலே ஆட் (ஆக்ட்) பண்ணியிருக்காளாம், அதுதான் கொஞ்சம் யோசனே யாயிருக்குது.

சானு:—இந்த காலத்துலே இதெல்லாம் யார் கேர் பண்ரா! டோங் கேர்னு (டோண்ட் கேர்) அடிச்சுதள்ளனும். பெய்யனுக்கு டெம் பிரவரி வேலெ இல்லாமெ பரமனெண்டாயிருக்கிரவனு பாத்துகுடு.

குட்டி :—அதெக்கூட உடலாம். இந்த கம்பெனி வேலேலே பின்சன் கடயாது. பாவிடன் பண்டு ஒருவேளே வந்தா வரலாம். அதிக்ஷ்டம் நன்னுயிருந்தா பொழச்சு போரான்.

திங் :—ரீஸ்த்ரார், (ரிஜிஸ்ட்ரார்) ஆபீஸிலே ஒரு பையன் இருக் கானும். ஐகோட்லே, (ஹைகோர்ட்டில்) ஒரு பெய்யன் இருக்கா னும். டேஸன் மாஷ்டேர் புள்ளே ஒத்தன் இருக்கானும். எந்த புள்ளே படியுமோம்மா! ஜாதகங்களே பாத்து பாத்து டிஸ்கஷ்டா, (டிஸ்கஸ்டெட்) பூடுத்து. தெந்தியும் (தந்தி)தபாலும் வந்த வண்ணமா இருக்கு. கல்யாணம் எப்படி ஆகுமோ? கடவுள்தான் இருக்கான்.

குட்டி :—என் கவலெப்பட்றே இந்த வரஷம் கட்டாயம் நடந் துடும். ஒம்பேத்தி என்னமோ நல்ல அதிக்ஷக்காரி. நீ கக்ஷப்படாதே யாரானு ஒரு பெய்யன் வந்து இக்ஷமா கல்லாணம் பண்ணிண்டு டுவன் பாரு.

திங் :—என்னமோம்மா! ஒன் வார்த்தெ பலிக்கனும். எனக் கொண்ணும் அண்டஷ்ட்டாண்டே ஆகலே.

---


## சந்தாநேயர்களுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

உடனே முந்துங்கள். எத்தனே புதிய சந்தாதாரர்களைச் சேர்த் தனுப்புகிறீர்களோ, அத்தனே எட்டணு விலேயுள்ள நாவல்களே இனு மாகக் கொடுக்கப்படும். பணம் அனுப்புகையில் வேண்டிய நாவல் களின் பெயரைத் தெரிவித்து, 8 அணு நாவலுக்கு 1 அணு விதம், தபாற் செலவுக்காகச் சேர்த்தனுப்பவும். மானேஜர்.

# நித்தியானந்தரின் ரேடியோ டயரி



[V. M. SRINIVASAN, M.A., B.L.]

நித்தியானந்தர் வீட்டிற்கு ஸ்ரீ லாவண்யசர்மா விஜயம் செய்த போது ஸ்ரீ ஆனந்தர் பூஜை செய்துகொண்டிருந்ததால் ஸ்ரீ சர்மாஜி சிறிது நேரம் காத்திருந்தார். அப்போது அங்கு ரேடியோ மேஜை மீதிருந்த ரேடியோ டயரியின்மீது அவரது கவனம் செல்லவே அதை எடுத்து 27-7-40 முதல் உள்ள குறிப்புகளைப் படிக்கலானார்.

ஜூலை (ம - மதராஸ். தி - திருச்சி.)

27. த்வாரம் வெங்கடசாமி நாயுடுவுக்குப் பதிலாக டி. கே. பட்டம்மாள் பாடினார். (ம) எப்போதும்போல நன்றாயிருந்தது. கடைசி உருப்படி மாத்திரம் சிறிது வளர்த்தப்பட்டதுபோலிருந்தது.

28. 'நவரஸம்' என்ற சங்கீதச் சித்திரம் மிக ரஸமாயிருந்தது. (தி) சில மாதங்கள் கழித்து இதே நிகழ்ச்சியைத் திரும்பவும் ஒலி பரப்பினால் நன்றாயிருக்கும். குமாரி பாலம் (ம) நன்றாகப் பாடுகிறாள். சீக்கிரத்திலேயே நன்கு வ்ருத்திக்கு வரக்கூடும்.

29. எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் கச்சேரியில் முதல் பாதி வழக்கம் போலில்லை. மொத்தத்தில் எதிர்பார்த்தபடி அமையவில்லை. (தி) திருச்சி கிராம நாடக சபை கோவலன் நாடகத்தை வழக்கம்போல திறமையாக நடித்தார்கள்,

30. மஹாராஜபுரம் விஸ்வநாதய்யர் (ம) கச்சேரியில் துடுகுகல, கனுகோன கிருதிகள் விசேஷமாயிருந்தன. சுப்பனின் பிரயாணம் (தி) என்ற நிகழ்ச்சி ஹாஸ்யரஸம் ததும்பியிருந்தது. மிகவும் ரஸித்தேன்.

31. 'மனஸா ஸ்வாதீனமை' என்று திருபுராம்பாள் பாட ஆரம்பித்தார். தொண்டைதான் ஸ்வாதீனமில்லாதிருந்தது. வரகூர் முத்துவின் பிடில் (தி) நன்றாயிருந்தது.

ஆகஸ்ட்

1. "நிருத்யதி நிருத்யதி" என்ற நிகழ்ச்சி மிகவும் ரஸமாக விருந்தது. (தி) இதையும் திரும்ப ஒலி பரப்புவார்களென எதிர்பார்க்கிறேன்.

2. "பதினெட்டாம் பெருக்கு" என்ற நிகழ்ச்சி (தி) விசேஷமாகவிருந்தது. திருச்சி நிலயம் விசேஷ தினங்களில் பிரத்யேக நிகழ்ச்சிகளை நடத்தும் தனிப் பெருமை யடைந்துள்ளது. திருவெண்காடு சுப்ரமண்யபிள்ளையின் (தி) கச்சேரியில் இரண்டாவது பகுதி நன்கு அமைந்தது. மாதர் நிகழ்ச்சியில் (ம) அக்கிராசனம் வகித்தவர் சற்று தடமாடாது படித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

3. "வேலையிலாக் கொடுமை" (தி) என்ற நாடகம் சோக ரஸம் ததும்ப மிக நன்றாக நடிக்கப்பட்டது. அப்பட்டதாரி கதறியது இன்னும் காதிலேயே இருக்கிறது. சித்தூர் சுப்ரமணிய பிள்ளையின் பாட்டு (ம) எப்போதும்போல நன்றாயிருந்தது.

4. வாகூர் முத்து (ம) எஸ். வி. நாராயணன் (ம) எம். டி. பார்த்த சாரதி (தி) திருச்சி வாத்தியகோஷ்டி முதலியவர்களின் கச்சேரிகள் திருப்திகரமாயிருந்தன. காலம் சென்ற மைசூர் மஹாராஜா வைப்பற்றி திருச்சியிலிருந்து ஒருவர் தமிழில் பிரஸங்கம் செய்தார். 'ஆயிரத்தி எண்ணூற்றி தொளாயிரத்து நாலாம் வருஷம்' என்றெல்லாம் சொல்லிக்கொண்டு போவதையும், தட்டுத்தடுமாறிப் படிப்பதையும் பார்த்தால் "யார் இவர்? இது தமிழ்தானா? எங்கு கற்ருரோ தெரியவில்லையே" என்றெல்லாம் பெருத்த யோசனையில் ஆழ்ந்திருக்கையில் பிரஸங்கம் முடிந்ததும், "இதுவரை பேசியவர் கே. எஸ். வெங்கடரமணி" என்று அறிவிக்கப்பட்டது ஆச்சரியத்தைக் கொடுத்தது. மேற்படியார் பிரபலஸ்தரான கே. எஸ். வெங்கடரமணி அல்லவென்று நினைக்கிறேன்.

5. 'நட்பும் நீதியும்' என்ற நாடகம் (தி) 'ஏ. ஒன்.' சகல அம்சங்களிலும் சிறந்து விளங்கியது. நடிப்பு, கதைப் போக்கு, சம்பாஷணை, சங்கீதம் யாவும் நன்ருயிருந்தன. நமது பொறுமையின் அளவை சோதிக்க கடபுடா சப்தம் அதிகமாயிருந்தது. இயற்கையன்னையின் பேரில் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது.

7. ஈச்வரய்யர் வீணையும் (ம) டி. கே. ஜயராமய்யர் பிடிலும் (தி) தான் இன்றைய முக்கிய கச்சேரிகள்.

8. கே. வி. தியாகராஜன் (தி) கே. வி. கேசவ பாகவதர் (ம) இருவரின் பாட்டும் எப்போதும்போல நன்ருயிருந்தன.

9. கே. எஸ். நாராயணஸ்வாமியின் வீணையும் (ம) வி. எஸ். கிருஷ்ண ஐய்யரின் பாட்டும் நன்ருயிருந்தன.

10. ஆலத்தூர் சகோதரர்கள் பாட்டுதான் இன்றய விசேஷ கச்சேரி(ம).

11. திருச்சி வாத்யகோஷ்டி சங்கீதமும், அபிராமசுந்தரி பிடிலும் (தி) மிகவும் நன்ருயிருந்தன. குமாரி சுலோசனு கூடியவரை திருப்திகரமாகப் பாடுகிருள்.

12. கோபாலசாமி செட்டியின் பாட்டும் (ம), கிராமப் பஞ்சாயத்தும் (தி) ரஸித்தேன்.

13. முசிரியின் பாட்டு (ம) எதிர்பார்த்தபடியில்லை.

14. 'கலிங்கப்போர்' என்ற சிறு நாடகம் (தி) நன்ருயிருந்தது. இருந்தாலும், குறைகளில்லாமலில்லை.

15. செம்மங்குடியின் கச்சேரி (தி) பிரும்மானந்தமாக அமைந்தது. சாவேரியும், தோடியும் அபாரமாக விருந்தன. பல்லடம் நாகராஜன் புல்லாங்குழலும் (தி) நன்ருயிருந்தது.

16. வரலக்ஷ்மி நோன்பு, குற்ருல விஜயம் என்ற இரு நிகழ்ச்சிகளும்(தி) ரஸிக்கத்தக்கனவாக விருந்தன.

17. தியாகராஜ பாகவதரது பாட்டு எதிர்பார்த்தபடியில்லை. (தி-ம) நம்பிக்கைத் துரோகம் என்ற சிறு நாடகம் (தி) சுமாராயிருந்தது.

18. நீலம்மா கடாம்பியின் வீணையும், பாட்டும் (தி) மிக இனிமையாயிருந்தன. யதுகுலகாம்போதியில் சிறிது சறுக்கிற்று; ஆனல் சமாளித்துக்கொண்டார். மற்றபடி மிக நன்ருயிருந்தது. சென்னையில் ஜயம்மாள் பாடினுர்.

19. ராமபாகவதர் பாட்டுதான் இன்றைய முக்கிய கச்சேரி. (தி-ம). 'ஜமாபந்தி' (தி) என்ற நிகழ்ச்சி நன்ருயிருந்தது.

20. ராஜமாணிக்கம் பிள்ளையின் பிடில் (ம) வழக்கம்போலிருந்தது.
21. என். ஜி ஸீதாராமன் (ம) மிக விரைவில் முன்னேறிவருவது இன்றைய கச்சேரி யிலிருந்து தெரிய வருகிறது. கை வண்டிக்கார கந்தசாமியின் வாழ்க்கைச் சித்திரம் (தி) மிக அழகாயிருந்தது. ரிக்ஷாக்கார ரங்கன், பால்கார பாசாதி, கண்டிட்டர் கன்னியப்பன் முதலியவர்களின் வாழ்க்கைச் சித்திரங்களைப்போல உணர்ச்சி ததும்ப இயற்கையாக நடிக்கப்பட்டது.
22. இன்றைய சிறந்த கச்சேரிடி. கே. பட்டம்மாளுடையதுதான். (தி). 'ஆசிரியர் அவதி' என்ற நாடகம் (ம), சங்கீதாகளை யென்ற நிகழ்ச்சியின் (தி) எதிரொலி.
23. 'வைகறைத்துயிலெழு' என்ற நிகழ்ச்சி (தி) ஹாஸ்யரஸம் ததும்ப நடிக்கப்பட்டது.
25. டி. கே. ரங்காச்சாரி (ம), வலந்தகோகிலம் (தி) மிக திருப்திகரமாகப் பாடினார்கள். ஈரோடு விசுவநாதய்யர் பிடில் நன்றாயிருந்தது.
26. வெங்கடகிரியப்பாவின் வீணை எப்போதும்போல அபாரமாயிருந்தது. (ம) கீசகவதம் (தி), ஏ. பார்த்தசாரதியின் நாகஸ்வரம் (தி) இரண்டும் கூடியவரை திருப்திகரமாயிருந்தன. இரவில் 10 மணிக்கு மேல் நாகஸ்வரம் ஒலிப்பரப்புவது மிக இனிமையாயிருக்கிறது. நேரத்திற்கேற்ற ராகங்களை ஒலிப்பரப்பினால் விசேஷமாயிருக்கும்.
27. எம். எஸ் சுப்புலக்ஷ்மியின் கச்சேரியில் (ம) 'மீனாக்ஷி' 'பய்யத' முதலிய உருப்படிகள் மிக இனிமையாயிருந்தன. 'சுப்பனின் அறிவு தாகம்' (தி) என்ற நிகழ்ச்சி வழக்கம்போல் ஹாஸ்யக்களஞ்சியமாகவிருந்தது. சுந்தரகாமாக்ஷியின் பாட்டு கூடியவரை நன்றாயிருந்தது (தி).
28. ராமசர்மாவின் வீணை கேட்க ஆனந்தமாயிருந்தது. (ம) டி.கே. ஜயராமன் இனிமையாகப் பாடுகிறான். (ம).
29. இன்றைய விசேஷ கச்சேரி சாம்பசிவய்யரது வீணைதான். நல்லவேளையாக யாரும் கூட சேர்ந்து வாய்ப்பாட்டு பாடவில்லை.

---

# ஸெப்டம்பர் 11உ திருச்சி ரேடியோவில்

## ஸ்ரீ பாரதியார் நினைவு நிகழ்ச்சிகள்

அன்று நமது ஆசிரியையும், அன்னாரின் குமாரரான ஸ்ரீ வை. மு. ஸ்ரீநிவாஸனும் (ரேடியோ விமர்சகர்) பாடுவதையும், இதர நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதையும் கவனியுங்கள்.

| | | |
|---|---|---|
| 1-35 | மாதர்களுக்கும், குழந்தைகளுக்கும் விசேஷ நிகழ்ச்சி | வை. மு. கோ. |
| 6-05 | "சந்திரிகை"யைப்பற்றி ஒரு விவாதம் | ,, |
| 7-15 | "முன்னை இலங்கை" பாட்டு | வை. மு. கோ.<br>வை. மு. ஸ்ரீ. |



# வாணியின் பிரசாதம்

ஸாஹித்தியகர்த்தா : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

**57-வது மேளகர்த்தா** **சிம்ஹேந்திர மத்தியம.**

ஜன்ய ராகம். தவளிஹம்ஸி.

ஸ்வரப்படுத்தியவர் : ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி.

ஆரோஹணம்—ஔடவம்.

| ஸ | ரி | ம | ப | த | ஸ் |
|---|---|---|---|---|---|
| | சதுர் | ப்ரதி | | சுத்த | |

அவரோஹணம்—ஸம்பூர்ணம்.

| ஸ் | நி | த | ப | ம | க | ரி | ஸ |
|---|---|---|---|---|---|---|---|
| | காகலி | சுத்த | | ப்ரதி | சாதாரண | சதுர் | |

ராகம் - தவளிஹம்ஸி : சதுரஸ்ரஜாதி - த்ரிபுடை.

பல்லவி

| | | | |
|---|---|---|---|
| 1 | ; ; ; ○பா தா ப ம கா கா | ரீ , ஸா , - ஸா | ரீ மா ; -மா |
| | வேகப்ரோ வ | ரா ரா வே | ணுகா ன |
| 2 | பா , தா , ○பா தா ப த பமகா | ரீ , ஸா , -ஸ ரி | க ரி ஸா ; - ரீ |
| | லோ லா வேகப்ரோ வ | ரா ரா வே | ணு கா ன |
| 3 | மபதபதா ○பா தா ஸ்நிதபதா | பமகரிஸா - ஸரி | க ரி ஸா ; - ரீ |
| | லோ லா வேகப்ரோ வ | ரா ரா வே | ணு கா ன |
| 4 | மபதபதா ○பா தா ஸ்நிரிஸ்நித | பமகரிஸா -ஸ ரி | க ரி ஸா ; - ரீ |
| | லோ லா வேகப்ரோ வ | ரா ரா வே | ணு கா ன |
| | மபதபதா ○பாதாஸ்நி த ப தா | ஸ்ா, ஸ்ா, -ஸ் ரி | க் ரி ஸ்நிதா -பம |
| | லோ லா வனரு ஹ லோ | ச ன த | ய ஜே ஸி |
| | கரி ஸரிமா ○ | | |
| | நன் னு | | |

### அநுபல்லவி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ; ; ; | ○ பா தா ஸ் நிதப தா | ஸா, ஸா , -ஸ் ரி | க் ா ரீ ; - க்ா |
| | | மே க வர் ண | க க வா | ஹ ள ரூ |
| 2 | ரீ, ஸ் நி த | ○ பா தா ஸ் நிதப தா | ரீ , ஸா , -ஸ் ரி | க் ரி ஸ்ரிக்ா - க்ா |
| | பு டை | யே க வர் ண | க க வா | ஹ ன ரூ |
| 3 | ரீ, ஸ் நி த | ○ பா தா ஸ் நிதப தா | ரீ , ஸா , -ஸ் ரி | க் ரி ஸ் ரிம்ா - க்ா |
| | பு டை | மே க வர் ண | க க வா | ஹ ன ரூ |
| 1 | ரீ , ரீ , | ○ ஸ் ரி க்ா க் ரி ரீ ஸ்நி | தா , ஸா , - ஸ்ரி | க் ரி ஸ் நி தா-பம |
| | பு டை | ○ யா க ர க்ஷ | க புன் ஞ | க ச ய ன |
| 2 | கரிஸரிமா | ○ ஸ் ரி க்ா க் ரி ரீ ஸ்நி | த ஸ் ரீ ; - க் ரி | ஸ்நி ரிஸ் நித-பம |
| | நன் னு | யா க ர க்ஷ | க புன் ஞ | க ச ய ன |
| | கரி ஸரியா | ○ | | |
| | நன் னு | | | |

### சரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| | ; ; ; | ○ பா தா பா ; பம | பா , தா , - பம | ப த நி தபம-கா |
| | | பா லு டை ன | ப்ர ஹ்லா து | னிப்ரோ |
| | ரீ , ஸா , | ○ ஸ ரி கா க ரி ரீ ஸநி | தா , ஸா , - ஸரி | க ரி ஸ ரி மா-மா |
| | சி | சீ லு டை ன | த்ரு வ சிம் | த ன |
| | பா , தா, | ○ | | |
| | தீர் சி | | | |
| 1 | | ○ பா தா ஸ் நி த ப தா | ஸா , ஸா , - ஸ்ரி | க் ா ரீ ; - க் ா |
| | | மே லை ன | க ஜ ரா | ஜு னி கா |
| 2 | ரீ, ஸ் நி த | ○ பா தா ஸ் நி த ப தா | ரீ , ஸா , -ஸ் ரி | க் ரி ஸ் ரி க்ா-க்ா |
| | சி ன | மே லை ன | க ஜ ரா | ஜு னி கா |
| 3 | ரீ, ஸ் நி த | ○ பா தா ஸ் நி த பதஸ் | ரீ , ஸா , -ஸ் ரி | க் ரி ஸ் ரி ம்ா-க்ா |
| | சி ன | மே லை ன | க ஜ ரா | ஜு னி கா |
| 1 | ரீ , ரீ , | ○ ஸ்ரிக்ா க்ரிரீ ஸ் நி | தா , ஸா , -ஸ் ரி | க் ரி ஸ் நி தா-பம |
| | சி ன | பா ல க்ரு ஷ்ண | கோ தா ப்ரா | ண ப தி |
| 2 | கரி ஸரிமா | ○ ஸ்ரிக்ா க்ரிரீ ஸ் நி | த ஸ் ரீ ; -க் ரி | ஸ் நி ரி ஸ்நித-பம |
| | நன் னு | பா ல க்ரு ஷ்ண | கோ தா ப்ரா | ண ப தி |
| | கரி ஸரிமா | ○ | | |
| | நன் னு | | | |

### முக்தாயிஸ்வரம்

| | | | |
|---|---|---|---|
| | ○ பா,-பதஸ்நித- ரிஸ் | நிதபமகரி - தப | , மகரிஸநி - தப |
| ,த ஸா ; - | தா ஸ ரி - கா ரி ஸ -ரீ | ரிம - பதபம-பா | பத-ஸ்ா நித - பத |
| ஸ்ா நிதபம | ○ | | |
| | ○ பமகரி-ஸரிமபதஸ் | ரிஸ் - க்ரிஸ் நிதா | பமகரி - ஸரிமப |
| ,தஸ்ரி க் ரீ | - ஸ் நி த - க்ரிஸ்நீ - ரி | ஸ்நிதபா - ஸ்நித | ரிஸ்நிதா - ஸ் நித |
| பமாஸரிம | ○ | | |

திருடனுக்குத் தேள் கொட்டினல் அவன் யாரிடம் சொல்ல முடியும்? வாயைத் திறக்காது மருந்தைசெய்து கொடுத்தனுப்பினன். நினைத்த சந்தோஷம் நிர்மூலமாகிவிட்டால் சுறுசுறுப்பு எப்படி உண்டாகும்? இதே நிலைமையில் பின்னும் இரண்டு மூன்று நாட்களாகிவிட்டன. டாக்டரே அங்கு செல்வதால் விலாசினிக்குப் பதில் கிழவியே வந்து மருந்து வாங்கிச்சென்ருள்.

விஷம் ஏறுவதுபோல் மதுசூதனனின் மனத்தில் தடுக்கமுடியாத பிரேமை உண்டாகி ஜ்வாலை வீசத் தொடங்கியது. 'ஸ்வாமிகளிடம் வீராப்பு பேசிய அதே மனிதனு நான்?' என்று தன்னையே தான் நினைத்து வியப்புற்ருன். ஸ்வாமிகள் கூறிய வார்த்தைகள் மனத்தில் சுருக்கென்று தைத்தன. 'விலாஸினியைத் தான் எப்போது மறுபடியும் பார்க்கலாம்?' என்கிற ஏக்கம் பெரிதாகப் பிடித்துக்கொண்டது.

வழக்கம்போல் டாக்டர் அறையில் இவன் உட்கார்ந்திருக்கையில் முன்பு ஒருநாள் பார்த்த அதே நாவல் மேஜைமீதிருப்பதைக் கண்டு வெகு ஆவலுடன் அதை எடுத்து அன்று பார்த்த அதே படத்தைப் பார்த்தான். அதன் அடியிலிருந்த வாசகத்தைப் படித்தான். அன்று மிக்க வெறுப்பாயும், கசப்பாயுமிருந்த அதே படமும், வாசகமும் இன்று அமிருதம்போல் இனித்தன. கண்கொள்ளாக் காக்ஷியாயும், தெவிட்டாத தீங்கனியைப்போலும் இன்று தோன்றின.

'பாக்கியசாலிகள் இணைபிரியா இன்பஜோடிகள்' என்று தனக்குள் பேசிக்கொண்டே அந்தப் பக்கத்தின் தலையங்கத்தைப் பார்த்தான். "பிரேமை நதியில் பேரின்ப வெள்ளம்" என்று எழுதியிருந்தது. பிரேமை என்ற பதத்தின் இனிப்பு அப்போது சடக்கென்று அவன் மனத்தில் உணர்ச்சிமயமாய்த் தெரிந்தது. "பிரேமை நதியில் பேரின்பவெள்ளமா!...அடடா! முன்னெருநாள் அந்த நோய் பிடித்த பிச்சைக்காரி இதே அடியை முதலாகக்கொண்ட ஓர் இனிமையான பாட்டைப் பாடினளல்லவா?......என்று நினைத்தபடியே பக்கத்தைத் தள்ளினன்.

அதே பாட்டு அப்பக்கத்தில் காணப்பட்டதைக்கண்டு பின்னும் உள்ளம் பூரித்தான். அதைத் திருப்பித்திருப்பிப் படித்தான். "இப்பாடலின் சகல உரிமைகளும் ஆசிரியருடையவை" என்று அதனடியில் எழுதியிருந்ததைப்பார்த்ததும், "இத்தகைய ஆனந்தக் கவியும், கதையும் எழுதிய ஆசிரியர் யாரோ பார்க்கலாம்" என்று எண்ணி

முதல் பக்கத்தைப் பார்த்தான்.

அவ்வளவுதான். அவனுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு ஓர் எல்லேயே இல்லே. 'என்ன ஆச்சரியம்! யதிராஜயோகிகளின் சுயசரிதை; அவரே எழுதியது. சகல உரிமைகளும் ஆசிரியருடையவை" என்று எழுதியிருப்பது உண்மையா! அந்த ஸ்வாமிகள் எழுதியதா! அவருடைய சுயசரிதையா!...ஆம்...இதோ அவருடைய படமும் இருக்கிறதே! ஆகா! என்ன புதுமை இது! அந்த யோகிகளா இத்தகைய காதல் களஞ்சியத்தை எழுதினர்?' என்ற அபாரமான ஆச்சரியமும் அதைப் படிக்கவேண்டுமென்கிற ஆவலும் உண்டாயின. அன்று வேம்பாயிருந்ததே இன்று கரும்பாயினிக்கிறது. அன்று கல்லாயிருந்தது இன்று வெல்லமாக இனிக்கிறது. எல்லாம் மாயையின் கூத்து.

## 16

"எல்லாம் மாயையின் கூத்து. அன்று கல்லாயிருந்தது இன்று வெல்லமாக இனிக்கிறது. அன்று வேம்பாயிருந்ததே இன்று கரும்பாயினிக்கிறது. ஆதியில் இந்த வாழ்க்கையும், இந்த உயிரைச் சுமப்பதும் பெரும்பாரமாயிருந்தன. அதே உயிர் இன்று கற்கண்டுபோலினிக்கிறது. என்ன செய்வேன்? காலத்தின் அதிவேகமான மாறுபாட்டின் ஆச்சரியத்தை அறியும் சக்தி யாருக்குத்தான் இருக்கிறது? என் ஒரு கட்டையும் போய்விடுமாயின் என் விலாசினியை ஆதரிக்க யாரிருக்கிறுர்கள்? என் விலாசினிக்காக நான் இன்னும் நூறு வருஷங்கள் உயிர்வாழ்ந்தாலும் சலிக்காதுபோலிருக்கிறதே...அம்மா! விலாஸினி...விலாஸினி...என்ன செய்கிருயம்மா!" என்று தாயின் வாஞ்சை ததும்பக் கேட்டாள்.

விலாசினியால் பதிலே சொல்லமுடியவில்லே. தன்னுடைய நிலேயைப்பார்த்தால் தன் தாயார் இன்னும் வருத்தப்படப்போகிருளே என்று சற்று யோசனேயுடன் மெல்லச் சமாளித்துக்கொண்டு "அம்மா! நீ அதைர்யப்படாதேம்மா! டாக்டர் 'பயப்படவேண்டாம்; குணமாகிவிடும்" என்று கூறியிருக்கிறுர். ஸ்வாமிக்கு ப்ரார்த்தனே செய்துகொண்டிருக்கிறேன். நம்மைக் கைவிடமாட்டார். காப்பாற்றுவாரம்மா! பயப்படாதே' என்று தனது துக்கத்தை

யும் அதைரியத்தையும் மனத்திலடக்கிக்கொண்டுதைரியங் கூறினாள்.

தர்மாம்பாள் இவளைவிட வயதில் எத்தனை பெரியவள்? எவ்வளவு அனுபவம் வாய்ந்தவள்! தனது நிலைமை அவளுக்குத் தெரியாதா? தான் இனி பிழைப்பது அரிது. விலாசினியின் கதி அதோகதியாகிவிட்டதே என்ற விசனத்தை அவளால் சகிக்கவேமுடியவில்லை. இதே வேதனையின் குழப்பத்தில் உடம்பு இன்னும் அதிகமாயிற்று.

ஏற்கெனவே கவலையால் வருந்திக் குன்றிவிட்ட விலாசினியின் துயரம் கரைபுரண்டதற்குக் காரணம் அன்று டாக்டர் வராததேயாகும். தாயாரின் நிலைமை அவளை அசைக்கக்கூட முடியாதவாறு தேகம் உப்பல் கண்டுவிட்டது. கிழவியை டாக்டர் வீட்டுக்கு அனுப்பி விசாரித்ததில் டாக்டருக்கே . இரவு முதல் ஜுரம் வந்துவிட்டதால் வரமுடியாதாம்; மருந்து மட்டும் வந்து வாங்கிப் போகலாமாம் என்ற தகவல் கிடைத்தது.

“டாக்டர் அடியோடு பார்க்காமல் எப்படி மருந்துகொடுப்பது? நேற்றுக்கு இன்று உடம்பு கேவலமாயிருக்கிறதே; என் செய்வேன்?...அம்மா! நான் டாக்டர் வீட்டிற்கு நேரேபோய் அவரைப் பார்க்கமுடியுமானால் பார்த்து இருக்கும் நிலைமையைச் சொல்லி மருந்து வாங்கிவருகிறேன்” என்று கூறிவிட்டு நேரே டாக்டரின் வீட்டிற்கு வந்தாள்.

டாக்டருக்கே உடம்பாகையினால் அதிகக் கூட்டமில்லை. வந்துள்ள சிலருக்கு மருந்துசெய்து கொடுக்கும் மதுசூதனனின் உள்ளத்தில் புகுந்துகொண்ட ஓர் மின்ஸார உணர்ச்சியின் வேகம் வேலை செய்துகொண்டே இருந்தது. யாராவது வரும் காலோசைக் கேட்டால் அது விலாசினியாக இருக்கக்கூடாதா! என்று ஏங்குவான். மற்றவர்கள் வந்து மருந்து கேட்பதை வெறுப்பாகவே எண்ணினான்.

இவன் மனத்தின் தாபம் அதிகரிக்க அதிகரிக்க “நீ ஜிதேந்திரியனா! மாயையை ஜெயித்துவிட்டதாக நினைக்கிறாயா! உலகபந்தமும், அவாவும் அறுத்துவிட்டதாக எண்ணிவிட்டாயா!” என்று முன்பு ஸ்வாமிகள் சொல்லிய வார்த்தைகள் இவன் காதில் ஒலித்து திடும் திடும் என்று ஆட்டி வந்தன.

“இதுதான் மாயையின் முதல் படியா?....இது தான் மனிதர்களை ஆட்டிவைக்கும் காதல் என்ற மந்திரக்கோலா? மனிதனால் ஜெயிக்கமுடியாத, மறக்கமுடியாத மாயா சக்தி இதுதானா?”....

என்றெல்லாம் புதிய சிந்தனைகள் உதயமாயின. தனக்குள்ளேயே நினைப்பான்.

முன்பு தெரிவித்ததுபோல், அன்று ஸ்வாமிகளே எழுதியுள்ள புத்தகத்தை முற்றிலும் படித்தபிறகு அவன் மனமே அவனை ஏமாற்ற வாரம்பித்தது. "காதற் சுழல்காற்றில் துரும்பென அலைந்த பிறகு துறவியானவரா ஸ்வாமிகள்!" என்று நினைக்கும்போது அவன் இதயத்தில் ஓர் புதிய சந்தோஷ மலர் புஷ்பித்து மணத்தை அள்ளிவீசி மின்ஸாரம்போல் தாக்கி மெய்மறக்கச் செய்தது.

முதன்முதல் புத்தகத்தைப் பார்க்கும்போது வீசி எறிந்த வீரன் தினம் அதே புத்தகத்தைப் படிப்பதில் பேரானந்தமும் திகட்டாத இன்பமும் கொண்டான். இரவல் புத்தகத்தை எப்படித் தானே வைத்துக்கொள்ளமுடியும்? சொந்தமாக ஒரு புத்தகமே வாங்கி சதா கையில் வைத்துக்கொண்டான். மருந்து செய்யாத நேரங்களில் அங்கேயே நாற்காலியில் உட்கார்ந்து ஸ்வாமிகளின் வாக்கியங்களை இன்பமாகப் படித்துக் களிப்பான். சதா சர்வகாலமும், "பிரேமை நதியினில் பேரின்பவெள்ளம்" என்ற பாட்டை ஓயாது பாடுவதில் தன்னை யறியாத ஓர் இன்பத்தைக் கண்டான்.

"பிரேமை...பிரேமை...பிரேமையில் மூழ்கி அனுபவித்திருப்பதால்தான் ஸ்வாமிகள் 'உன்னால் அதை விலக்கமுடியாது' என்று பலதரம் அழுத்தந் திருத்தமாய்க் கூறி எச்சரித்தார். அந்த மகானின் வாக்கு பலித்துவிட்டதே. நான் அந்த மாயா மோகத்தை விலக்க வேண்டுமென்று எத்தனை பாடுபட்டாலும் எல்லாம் வீணாகிவிடுகிறதே. நான் இந்த கதியடைந்திருப்பதை அந்த யோகியார் அறிந்தால் என்னைக் கேலி செய்து சிரிப்பாரே! இதென்ன மாய வேதனையோ என்னை வாட்டுகிறதே. வெளியில் சொல்லவும் வெட்கம். சொல்லாதிருப்பதற்கும் துக்கம்...

"சீச்சீ!...நானா இந்த அற்பத்திற்கு மயங்கிச் சாவது! இந்த எண்ணத்தை நினைக்காமலும், அந்தப் பெண் பேயைப் பார்க்காமலும் இருந்துவிட்டால் தானாகவே மறந்துவிடுகிறது. அவ்வளவு தானே" என்று தனக்குள் தீர்மானமாய் த்ருடவைராக்கியம் கொண்டான். ஆனால், முதன்முதல் அவன் உள்ளத்தைக்கொள்ளை கொண்ட வார்த்தைகளாகிய, "மிக்ஸ்சர் மட்டுந்தானா! மாத்திரை பவுடர் ஒன்றுமில்லையா?" என்கிற சப்தம் திடும் திடும் என்று ஒலித்து அவனைக் குலுக்கிக்கொண்டே நாட்கள் சில கடந்தன.

நாம் முன்பு தெரிவித்தபடி விலாஸினி மிக்க விசனத்துடன் அங்கு வந்து 'ஐயா!', என்று அழைத்தாள். மதுசூதனன் வேலை ஒன்றும் இல்லாததால் ஸ்வாமிகளின் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். அந்த அத்தியாயத்தில் முற்றிலும் பிரேமையைப் பற்றியே இருந்தது. அதில் லயித்துப்போயிருந்த சமயம் "வீணையின் நிகரிலா நாதமோ, யாழின் இன்ப ஒலியோ, கோகிலத்தின் குளிர்ந்த மதுரத்வனியோ!" என்று பிரமிக்கும்படி குரல் கேட்டதும் மதுசூதனன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அதே சமயம் விலாஸினி மறுபடியும் "ஐயா! டாக்டரைப் பார்க்கமுடியுமா! என் தாயாரின் நிலைமை மிகவும் கேவலமாயிருக்கிறது. அவசரமாக டாக்டரைப் பார்க்கவேண்டும்" என்று கண்ணீர் முத்துமுத்தாய் பெருகி ஓடியவாறு கேட்டாள்.

அந்த நிமிஷத்திற்குமுன்புவரையில் பரம வைராக்கியத்துடன் நடந்துகொள்ளவேண்டும் என்று தீர்மானம்செய்த மதுசூதனனின் பாடு தர்மசங்கடமாகிவிட்டது. தலையை நிமிரக்கூடாதென்று எத்தனையோ பிரயாஸைப்பட்டுக் குனிந்துகொண்டே இருந்தான். அவனையறியாது தலை தானாக நிமிர்ந்து அந்த வனிதையை நோக்குகிறது. அடுத்த நிமிஷம் தலை கவிழ்கிறது.

பயித்தியம்போல் இம்மாதிரி தலை நிமிருவதும், குனிவதும் திருகத்திருக விழிப்பதும் முகத்தில் அசடுவழிய நாட்டியம் ஆடுவதுமான மதுசூதனனைக் கண்ட விலாஸினி "ஐயா! கேட்டதற்குப்பதில் சொல்லாது ஏதோ யோசிக்கிறீர்களே! என் இதயத்தின் துடிப்பும் என் மனத்தின் தவிப்பும் தெரியவில்லையா! டாக்டரைப் பார்க்க முடியுமா! தயவு செய்து சொல்லுங்கள்" என்று சற்று அழுத்தமாகக் கேட்டாள்.

சுளீறென்று அடிபட்டவன் அலறி எழுந்திருப்பதுபோல் மதுசூதனன் நாற்காலியிலிருந்து எழுந்து தைரியமாய்த் தலை நிமிர்ந்து பார்த்தான். தான் அம்மாதிரி அசட்டுத்தனமாயிருந்தது மனிதத் தன்மைக்கே ஏற்றதல்லவென்ற உணர்ச்சியுடனே உதயமாகியதால் "அம்மணீ! டாக்டருக்கும் ஜுரம் படுத்திருக்கிறார். அவரைப் பார்க்கமுடியாதே" என்றான். விலாஸினியின் முகத்தைப் பார்க்கப் பார்க்க தன் கண்முன்பே இடிந்து அவன் நினைத்த வைராக்கியக் கோட்டை தூள்தூளாய்ப் பறந்து சிதறிப்போவதுபோல் தோன்றியது. அப்படியே கண்கொட்டாது பார்த்துக்கொண்டே நின்றான்.



183045

விலா:—ஐயோ! அப்படியானல் நீங்களாவது போய் விசாரித்துக்கொண்டு வாருங்களேன். அம்மாவுக்கு தலைபுரட்டலும் மூச்சுத்திணறலும் நேற்று முதல் உண்டாகி இருப்பதைக் கண்டால் பயமாயிருக்கிறது. என்ன செய்யலாம் என்று கேளுங்களேன்—என்று கூறும்போது குரல் கம்மிப் பரிதாபம் சொட்டியது. மதுசூதனனின் மனம் இளகியது. ஓட்டமாக உள்ளே ஓடினன். திரும்பி வந்து, "அம்மணி! ஒருவரையும் அனுமதிக்காத டாக்டர் உங்களை அங்கு வர அனுமதித்துவிட்டார். வாருங்கள்; அழைத்துச் செல்கிறேன்" என்று கூறி விலாசினியை அழைத்துக்கொண்டு மாடிக்குச் சென்றான்.

டாக்டரைப் பார்க்கும் முன்பே விலாசினியின் துக்கம் பொங்கி வந்தது. 'டாக்டர்!...என் துரதிருஷ்டமா நீங்களும் இப்படி படுத்துவிட்டீர்கள்? அம்மா என்னைத் தனியே தவிக்கவிட்டுப் போய்விடுவாள் போலிருக்கிறதே! என்ன செய்வேன்! நீங்களும் படுத்துவிட்டீர்களே! மருந்து யார் கொடுப்பார்கள்?' என்று கூறி பெரிதாகப் புலம்பினள்.

டாக்:—அழாதேம்மா! வியாதி வந்துவிட்டால் அது அவ்வளவு சுலபமாய்ப் போய்விடுமா! சற்று பலமாக வந்திருக்கிறது. ஒருக்கால் டைபாயிடா யிருக்குமோ யென்றும் சந்தேகமாயிருக்கிறது... எதற்கும் நீ ஒரு காரியம் செய்தால் தேவலை. ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடேன். அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

விலா:—ஐயோ! ஆஸ்பத்திரியில் அநாதையாய் அனுப்பிவிட்டு நான் என்ன செய்வேன் டாக்டர்? பொதுஜனங்களுக்கு நன்மையாயும், உபகாரமாயும் இருப்பதாகத்தான் ஆஸ்பத்திரிக்குப் பெயர். ஆனல் அங்கு நடக்கும் அக்ரமங்களும் பக்ஷபாதங்களும், சித்திரவதையும் கூறத்திறமே இல்லை டாக்டர்! நோயாளிகளுக்குச் சில தினங்கள் ஆகாரமே கொடுக்கிறதில்லையாம். கணக்கில் வாங்கும் பாலும், ரொட்டியும் எந்த பூதம்தான் விழுங்கிவிடுகிறதோ தெரியாது. இந்த அவந்தரையிலா என் தாயாரை அனுப்புவது?

டாக்:—பதருதே விலாசினீ! ஏதோ சில நர்ஸ்கள் கவனிக்காதிருக்கலாம். ஆகாரமே இல்லை என்று உனக்கு யார் சொன்னது?... இதெல்லாம் வீண் புரளியாயிருக்கலாம்.

விலா:—டாக்டர்! நான் பொய் சொல்லவில்லை. எங்கவீட்டு பூக்காரி ஆஸ்பத்திரியில் படுக்கவேண்டிய நிர்ப்பந்தமான வியாதி

வந்துவிட்டதால் படுத்திருந்தாள். அங்கு நடக்கும் அக்ரமங்களை அத்யாயம் அத்யாயமாய்ச் சொல்லுகிறாள். "இன்று பால், ரொட்டி ஒன்றும் மீறவில்லை. வீட்டிலிருந்து வரவழைத்துச் சாப்பிடு" என்று பசியால் ப்ராணன் துடிக்கும் நோயாளிக்குக் கூறிவிட்டார்களாம்.

"அங்குதான் ஜெயிலுக்கு ஆள் அனுப்புவதுபோல் அனுப்பி விட்டு எல்லோரும் போய்விடவேண்டுமே. இந்த அழகில் யாரிடம் சொல்வது. வீட்டிலிருந்து எப்படி வரவழைப்பது? நீங்களே சொல்லுங்கள். களைப்பினால் தவித்து உயிரே போய்விடும்போலாய் விட்டதாம். தற்செயலாய் பக்கத்துப் படுக்கையிலிருப்பவளை யாரோ பார்க்கவந்தாளாம்; அவர்களிடம் சொல்லியனுப்பினாளாம்.

ஏழை பாவம்! புஷ்பம் விற்று ஜீவிக்கும் அவளுக்கு செல்வாக் குக்கு எங்கேபோவது? வீட்டைக் கண்டுபிடித்துச் சொன்னபிறகு அந்தப் பூக்காரியின் மகள் கையிலிருந்த ஒரு ரூபாய்க்கும் அன்று விற்பதற்காக பூ வாங்கிக்கொண்டு வந்துவிட்டாளாம். கையில் காலணா இல்லை. பிறகு தவியாய்த் தவித்து எங்கம்மாளிடம் நாலணா கடன் வாங்கிக்கொண்டுபோய் காப்பி, ரொட்டி, ஒரு ஆரஞ்சி, இவைகளை வாங்கிக்கொண்டுபோய்க் கொடுக்கும்போது மணி மூணாகிவிட்டதாம். நோயாளியின் கதி என்னமாயிருக்கும்?

இன்னொன்று. எழுந்திருக்கவே முடியாது தவிக்கும்போது பெட்பேன் வைக்கக் கூவினால் சில சமயம் காதிலேயே போட்டுக் கொள்ளாது நர்ஸ்கள் தடிதடியாய் உலாவுகிறார்களாம். சில சமயம் சிள்ளுசிள்ளென்று சீறி விழுந்து "என்? சும்மா வயித்துக்குக் கஞ்சி யும், காப்பியும், ரொட்டியும், சோடாவும் துண்ணுப்புட்டு இப்பிடி எங்க ப்ராணனே எடுக்கணும்? சிவனேன்னு கடக்கறத்துக்கு என்ன?" என்று ஈவிரக்கமின்றி கேட்கிறார்களாம்.

இம்மாதிரி ஒரு நோயாளியைக் கேட்டால் அவள் மனது எப் படித்தான் தத்தளிக்காது? "அதுக்காகத்தான் நோயாளிக்குக் குடுக் கிற பாலையும், ரொட்டியையும், பெருச்சாளிபோல் நீங்க துண்ணுப் புட்டு எங்களே பட்டினி போட்டுக் கொல்றீங்களா! பொதுஜனங் களுக்கு நன்மை பண்ற பவிசு இதுதானா?" என்று ஒருத்தி துடுக் காகக் கேட்டுவிட்டாளாம். அடேயப்பா! அவளை நாய்போல் பத்து நர்ஸ்களாகச் சேர்ந்து சண்டைக்கு இழுத்து சித்திரவதை செய்துவிட்டார்களாம்.

பணக்காரர்களுக்கே, பிடிக்குப்பிடி லஞ்சம் கொடுப்பதுபோல்

கொடுத்தால்தான் சில்லரை தேவதைகள் சலாம் குலாம் போட்டு வேலை செய்கிறதாம். இல்லாவிட்டால் இதே கதிதானும். எத்தனை பொருமை! எத்தனை துவேஷம்! ஒரு டாக்டருக்கு ஒரு டாக்டர் வயிறெரிகிருர்கள். சாதாரணமாய்ப் போகிறவர்கள், ஒரு டாக்டரின் பெயர் சொல்லி "இருக்கிருர்களா? வருவார்களா?" என்று கேட்டால் எந்த நர்ஸாவது அல்லது டாக்டராவது, "இருக்கா இல்லை. வருவா வரமாட்டா!" என்று ஏதாவது சரியாய் பதில் சொல்கிருர்களா! அதற்கே ஒற்றுமையைக் காணவில்லை. மூஞ்சியைக் காட்டுவதும், வராதிருக்கும்போது வந்திருப்பதாகப் பொய்சொல்லிக் காக்கவைப்பதும், வந்திருக்கையில் வரவில்லை என்று திரும்பிப்போகச் செய்வதுமான லீலைகளை நானே கண்ணுறப்பார்த்திருக்கிறேன். சரணுகதியாய் அங்கேயே கிடக்கும் நோயாளிகளைப்பற்றிக் கூறவேண்டுமா!

டாக் :—(நகைத்துக் கொண்டே) ஏதேது விலாசினி! ஆஸ்பத்திரி அனுபவத்தைப்பற்றி ஒரு லெக்சர் செய்வாய்போலிருக்கிறதே!....

டாக்டரின் மனைவி:—விலாசினி சொல்வது முற்றிலும் சரி. இன்னும் வேண்டுமானுலும் நான்கூடச் சொல்வேனே. நம்ப ஸரஸ்வதியின் பெண் அங்கு ப்ரஸவித்தபோது நான் பார்த்தேனே. அவளை என்ன பாடு படுத்திஞர்களாம் தெரியுமா! பொது வார்டில் போட்டுவிட்டார்களாம். குழந்தை பிறந்த உடனே குழந்தையையும், தாயையும் வேறு வேறு போட்டுவிட்டார்களாம். ப்ரஸவித்தவளுக்கு நடக்கச் சக்தியிருக்குமா! விளக்கெண்ணெயைக்கொடுத்துவிட்டு அவளேயே எழுந்து நடந்து லெட்ரினுக்குப்போகும்படிச் சொன்ஞர்களாம். 7 8 தரம் நடக்கமாட்டாது நடந்துசென்று களைப்பும், சீதளமும் கொண்டு ப்ரமாதமாய் ஜுரம் வந்துவிட்டதாம். வீட்டிலேயே வைத்துக்கொண்டிருந்தால் இந்த சிறுமைப் படவேண்டாமே. "எல்லோரும் ஆஸ்பத்திரி, ஆஸ்பத்திரி என்று அடித்துக்கொள்கிருர்களே! வீட்டில் இடமில்லையேயென்று அனுப்பிவிட்டுத் தவிக்கிறேனே!" என்று பாவம் அங்கலாய்த்துவிட்டாள். சில நர்ஸ்களும், சில டாக்டர்களும், மண்டை கொழுப்புப் பிடித்தப் பிண்டங்களாகவல்லவோ இருக்கிருர்கள். பெரிய பண மூட்டை இல்லாத ஏழைகள் ஆஸ்பத்திரியில் இருக்க யோக்யதையே இல்லை. இருந்தால் அடிமைபோலவும், கைதிகளைப் போலவுந்தான்

இருக்கவேண்டும். ஐயோ பாவம்! விலாசினி தன் தாயைப் பிரிந்து என்ன செய்வாள்?

டாக்:—சரி. நீ வேறு சட்டம் போடுகிருயே. வீட்டில் வைத்து அதிக பணத்தைச் செலவிட முடியுமா என்றதால் கூறினேன். ஏழைகளுக்கு என்ற பெயரால் ஆஸ்பத்திரி நடக்கிறதேயன்றி உபயோகம் என்னவோ பணக்காரர்களுக்குத்தான். தடபுடல் உபசாரமும் அவர்களுக்குத்தான். இது தெரியாதா!....

விலா:—டாக்டர்! நேரமாகிறதே! அம்மா! எப்படி யிருக்கிருளோ, இப்போது ஏதாவது வழி சொல்லுங்களேன்.

டாக்:—சரி...நேரில் பார்க்காது ஒன்றுமே சொல்லமுடியாது. அடுத்த தெருவில் அம்பலவாணன் என்று ஒரு டாக்டர் இருக்கிருர். அவர் கெட்டிக்காரர். நான் சொல்லியதாக அவரிடம்போய்த் தெரிவித்து அவரை அழைத்துக் கொண்டுபோய் காட்டு. மருந்து கொடுப்பார். பயப்படாதே! எனக்கு வெளியில் வரமுடியாது. போய்வாம்மா...

விலா:—வெறுமை சொன்னல்போதுமா! கடிதம்வேண்டாமா!

டாக்:—அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். அவர் வீட்டுக்கு வந்தால் இரண்டு ரூபாய் பீஸ். அதைக் கையிலேயே கொடுத்து விடு. அவர் என்ன சொன்னர், என்ன மருந்து கொடுத்தார், என்பதை எனக்குத் தெரிவி.

விலா:—நல்லது. நான் வருகிறேன். வந்தனம்—என்று கூறி விட்டுச் சென்ருள்.

மதுசூதனன் இவளை மாடியில் விட்டுவிட்டுக் கீழே வந்து விட்டான். விலாசினி இறங்கிப் போகும்போது வழியிலேயே நின்று பார்த்துக்கொண்டிருந்து "என்ன சொன்னர்?" என்று விசாரித்தான். டாக்டர் கூறியதைச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

இரண்டு ரூபாய் முதலிலேயே பீஸ் கொடுக்கவேண்டுமென்றதும் அவள் மனம் குழம்பியது. கையில் இரண்டணகூட இல்லை என்பதை யாரறிவார்கள்? எப்படியாவது தன் தாயார் பிழைத்தால் போதும் என்கிற ஒரே ப்ரேமை அவள் மனத்தை முற்றுகை இட்டது. அதற்காகத் தான் எவ்விதமானபாடுபடவும், எங்கிருந்தோ ஒரு தைரியமும், நம்பிக்கையும் உண்டாயின.

## 17

அதற்காகத் தான் எவ்விதமான பாடுபடவும் எங்கிருந்தோ ஒரு தைரியமும் நம்பிக்கையும் உண்டாகிவிட்டன. எட்டிக் காயைப்போல் எண்ணி மறக்கவேண்டுமென்று நினைக்கும் வைராக்கியமுற்றும் க்ஷணநேரத்தில் இடிந்து பொடி சூரணமாகி விட்டது. விலாசினி விசனத்துடன் போய்விட்ட காக்ஷி அவன் மனத்தைப் பின்னும் வாட்டி வருத்தியது. "ஆபத்தில் உதவிசெய்யத் தனக்கு யாதொரு சந்தர்ப்பமும் இல்லையே! வலுவில் சென்று பேசினாலும் வித்தியாஸமாக அவளே நினைத்துவிடுவாளோ! அல்லது பிறர் விபரீதமாகக் கயிறு திரித்துவிடுவார்களோ!" என்று புதிய புதிய எண்ணங்கள் வேறு நெஞ்சில் புகுந்து குடையவாரம்பித்தன.

விலாசினி தெருக்கோடி செல்லும் வரையில் பார்த்துக் கொண்டே நின்றான். இச் செய்கையைப் பிறர் கண்டால் என்ன சொல்வார்களோ என்றும் அவன் நினைக்கவில்லை. "பிரேமை நதியினில் பேரின்பவெள்ளம்" என்று அவன் வாய் முணுமுணுத்தது. விலாசினியின் உருவம் மறையவும் இன்னொரு உருவம் அதி வேகமாக அந்தப் பக்கத்தில் வருவதை நோக்க மதுசூதனனுக்குச் சலிப்பே உண்டாகியது.

ஏதோ குடிமுழுகிவிட்டதுபோல் தலைதெறிக்க கிட்டு ஓட்டமாக வந்து, "மதுசூதனா! உன்னை அவசரமாக அப்பா கையுடன் அழைத்துவரச் சொன்னார். வா! சீக்கிரம்வா!" என்று கூப்பிட்டான்.

மது:—என்ன விசேஷம்? தினம் உள்ள போராட்டந்தானே! எனக்குக் கல்யாணமும் வேண்டாம். எழவும் வேண்டாம். என்னை வீணாகத்தொந்தரவு செய்வதில் லாபமில்லை. நீங்கள் போய்வாருங்கள்.

கிட்டு:—டேய்! அதிகப்பிரஸங்கித்தனமாய்ப் பேசாதே! உங்க சொந்த அப்பாவும் அம்மாவுமே இப்போது பகையைவிட்டு சினேக பாவத்தில் வந்து உறவு கொண்டாடி, தம் வழியில் ஒரு பெண்ணையும் பார்த்துக்கொண்டு வந்திருக்கிறார்கள் தெரியுமா! முன்போல் நீ ஏய்க்க வழியில்லை. அவர்கள்தான் உன்னைக் கையோடு அழைத்து வரச் சொன்னார்கள். நீ இம்மாதிரி பிடிவாதம் செய்வது அழகல்ல. சொத்துக்காரப் பெண்ணும். நிரம்ப அழகாயிருக்கிறதாம்...

மது:—ஐயோ! ராமராமா! அழகும் அவதியும் என்னை ஒரு தரம் செய்த சோதனை போதுமே...என்னை யாரும் தொந்தரவு

செய்யவேண்டாமே—என்று பேசிக்கொண்டிருக்கையில் ராஜம் அங்கு ஓடிவந்தாள். அவளைப் பார்த்ததும் ஆச்சரியத்துடன், "என்னம்மா நீயும் வந்தாய்?" என்று கேட்டான்.

ராஜ:—அப்பா, மதுசூதனு! வீணுக என்னையும், என் லக்ஷ்மியையும் சந்தியில் இழுக்காதே. உனக்கு லக்ஷ்மியும் நானும் சூன்யத்தை வைத்து உன் மதியை மாற்றி நீ கல்யாணம் செய்துகொள்ளாத வழியை நாங்கள் செய்துவிட்டதாகத் திட்டி த்வேஷம் பாராட்டிய உன் தாயாரே இன்று ஒரு பெண்ணைக் கொண்டுவந்திருக்கிருள். நீ அதைச் செய்துகொள்ளாவிட்டால் நாங்கள் எங்காவது யாத்திரை போய்விடுகிறேம். எங்களால் முடியாது. நீ முதலில் வீட்டுக்கு வா; பெண்வீட்டார் வந்திருக்கிருர்கள்—என்று நிர்ப்பந்தமாய்க் கூப்பிட்டாள்.

மதுசூதனன் தர்மசங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிருன். சில வருஷங்களுக்கு முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அவன் கண்முன்பு ஒரு சுழல்போல் சுழன்றன. என்ன செய்வதென்று தெரியாது திகைத்தான். "எம்மா! நான் எதற்காக வரவேண்டும்? என் வார்த்தையை நீங்கள் கேட்பதாயின் இன்னும் கொஞ்சநாள் கழித்து உங்களிஷ்டப்படியே செய்யுங்கள். இப்போது என்னை விட்டுவிடுங்கள். வீண் பிடிவாதம் செய்யவேண்டாம்" என்ருன்.

அவனை பலாத்காரம் செய்து இருவருமாக வீட்டிற்கு இழுத்துக்கொண்டு போனுர்கள். எந்திரம்போல் நடந்து சென்ருன். மனத்தின் தத்தளிப்புக்கு அளவேது? தன் மனத்தில் போராடும் உண்மையைக் கூறுவானு! அன்றி மனத்திற்கு விரோதமாக மணந்துகொள்வானு! ஒன்றும் தோன்ருது தவித்தான்.

வீட்டிலோ ஒரு டஜன் பேர்வழிகள் உட்கார்ந்துபேசுவதைப் பார்க்கவே பிடிக்கவில்லை. "இவர்தான் கல்யாணப் பிள்ளையாண்டானே?" என்று ஒருவர் கேட்டார். அதற்கு திருவேங்கடம், "ஆம். இவன்தான். மகா யோக்கியன்; பரமசாது" என்று ஆரம்பித்தார். இன்னெருவர் அதற்குத் தாளம் போட்டார். மதுசூதனனுக்கு ஒரு நிமிஷங்கூட அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. ஏதோ அலர்ஜன்னி கண்டவன்போல் பதைத்து நின்ருன்.

கல்யாணப்பேச்சு வலுத்து முகூர்த்தம் வைக்கும் வரையில் முற்றிவிட்டதால் அவனுக்கு ஏதோ சங்கடம் செய்துவிட்டது. துணிச்சலும், கோபமும் கொண்டு உரத்த குரலில்...."எனக்குக்

கல்யாணம் வேண்டாம். நிறுத்திவிடுங்கள். நான் பயித்தியம். பயித்தியத்திற்கு உங்கள் பெண்ணைக்கொடுத்து சங்கடப்படவேண்டாம்; எழுந்துபோய் விடுங்கள்'' என்று ஆவேசம் வந்தவனைப் போல் கூறிவிட்டு ஓட்டமாக டாக்டர் வீட்டிற்கே வந்துவிட்டான்.

இதைக்கண்ட எல்லோருக்கும் இடிவிழுந்ததுபோலாகிவிட்டது. "ஓய்! எங்களை இப்படி அவமானப்படுத்துவதற்காகவா இங்கு அழைத்துக்கொண்டு வந்தீர்கள்? நாங்களென்ன உங்கள் வீட்டு வேலைக்காரர்கள் என்றும், தெருவில் திரியும் பயித்தியக்காரர்கள் என்றும் நினைத்தீர்களா! உங்கள் வார்த்தையை நம்பி பெண்ணையும் இழுத்துக்கொண்டு வந்து ஊருக்கு இளப்பமாக வார்த்தைக் கேட்க வைப்பதுதான் உங்கள் யோக்யதையா! ஆகட்டும். இந்த அவமானத்திற்கு நாங்கள் மானநஷ்ட வழக்குப் போட்டு உங்களைச் சந்தியிலிழுத்துவிடுகிறோம்'' என்று பெண்வீட்டார்கள் ஆக்ரோஷத்துடன் கூறிவிட்டுப் பெண்ணையும் அழைத்துக்கொண்டுபோய் விட்டார்கள்.

ஐயோ! பாவம்! மற்றவர்களின் மனம் எப்படித்தான் தவிக்கும்? மதுசூதனன்பேரில் உண்டாகிய கோபத்திற்கு எல்லையே இல்லை. அவனை அப்படியே அடித்துவிடலாமா என்றும் தோன்றியது. பெண்வீட்டுக்காரன் எங்கே மானத்தை வாங்கப்போகிறானோ என்கிற பயமும், பூர்ணமாகப் பிடித்துக்கொண்டது. எண்ணெயில் விழுந்த ஈயைப்போல் குழம்பித் தவிக்கிறார்கள். வீட்டிலிருந்து சென்ற மதுசூதனனின் இதயமும் வேகமாக ஓடுகிறது. ஒருவிதமும் நிலைகொள்ளாது தாமரையிலை நீர்த்துளியைப்போன்று மனம் தத்தளிக்கின்றது. தலைசுற்றலும் பெருமூச்சும் துரத்தி வதைக்கின்றன.


# ஆத்ம சக்தி

**பொன்விழா நாவல்** **ரூ. 1/4.**

பலவித வர்ணங்களில் 11 ஆப்டோன் படங்களுடன் கூடிய இரண்டாம் பதிப்பு. முன்பண மனுப்பி, தபாற்செலவின்றிப் பெற்றுக்கொள்ளவும். வி. பி. கிடையாது.

# 18

ஒருவிதமும் நிலைகொள்ளாது தாமரையிலை நீர்த்துளியைப் போன்று மனம் தத்தளிக்கின்றது. தலைசுற்றலும் பெரு மூச்சும் துரத்தி வதைக்கின்றன. இரண்டு ரூபாய்...இரண்டு முழு வெள்ளி ரூபாயிக்கு நான் என்ன செய்வேன்? யாரைப் போய்க் கேட்பேன்?....இருக்கட்டும். என் தாயாரின் ஆபத்து நீங்குவது தான் என் முதல் காரியம். அதற்காக நான் பிச்சை எடுக்கவும் தயாராகிறேன். இதாலென்ன அவமானம்? என் கடமையில் அது முதன்மையல்லவா!"என்றுஎண்ணியபடியே ஒருமுடிவுக்குவந்தாள்.

தர்மாம்பாள் ஒரு ஏழையானதால் அவள் ஒரு வீட்டில் சமையல் செய்துகொண்டிருந்தாள். அந்த வீட்டிற்கு விலாசினி வெகு வருத்தத்துடன் சென்றாள். இவளைப் பார்த்ததுமே வீட்டுக் காரம்மாள், "வாடியம்மா! அம்மாவுக்கு எப்படி இருக்கு? குணமா யிருக்கா?" என்று கேட்டாள்.

விலா:—இல்லை மாமீ! ரொம்ப அதிகமாயிருக்கிறது. பய மாயுமிருக்கிறது. ஏழைகளுக்கு உபகாரமாகப் பார்க்கும் வைத் தியருக்கு என் துரதிருஷ்டம் உடம்புக்கு வந்துவிட்டது. வேறு டாக்டரைக் கூப்பிடவேண்டும். அவர் பீஸில்லாது வரமாட்டாராம். மூன்று ரூபாய் கடனாகக்கொடுங்கள். அம்மாவுக்குக் குணமானதும் சம்பளத்தில் பிடித்துவிடலாம். இல்லையேல் நான் எப்படியாவது திருப்பிக் கொடுத்துவிடுகிறேன். ஆபத்தான சமயமாயிருக்கு.

எஜ:—ஏண்டியம்மா! ஏற்கெனவே ஒங்கம்மா 5 ரூபாய் வாங்கி இருக்கிறா. கடன் ஏறிக்கொண்டேபோனால் ஆபத்துதானே. ஆஸ்பத்திரியில் விடேன். இனமாக வைத்தியம் செய்வார்களே!

விலா:—(மனது துடிக்க.) மாமீ! ஆஸ்பத்திரியின் அக்கிரமம் தெரிந்த தாங்கள்கூட அப்படிச் சொன்னால் நான் என்ன செய் வேன்? என் தாயாருக்குத் தெளிந்தாலும் தெளியாவிட்டாலும் என் கையால் தண்ணீர் ஊற்றி நான் திருப்தியடைவேன். ஆஸ்பத்திரியில் அனுப்பிவிட்டுப் பரதேசிபோல் நான் எப்படி இருப்பேன்? எனக் கென்ன பணமிருக்கிறதா! நீங்கள் அதைரியமே படவேண்டாம். நான் கட்டாயம் திருப்பிக்கொடுத்து விடுகிறேன். இப்போது தயவுசெய்யவேண்டும். என்று கூறும்போது கண்ணீர் பெருகியது.

சந்தேகமில்லாது பணத்தைக் கொடுக்க மனமிருந்தால் தானே

பேசமுடியும். இல்லை என்று கூறுவதற்கு ஏதாவதொரு சாக்குச் சொல்வது சகஜந்தானே...“மாமா ஊரிலில்லையே... அவரிடந்தானே பணமிருக்கிறது. நான் என்ன செய்வேன்? உன்னைப் பார்த்தால் பரிதாபமாகத்தானிருக்கிறது” என்று இழுத்தாள்.

விலாசினியின் இதயம் வெடித்துவிடும்போலாகிவிட்டது. என்ன செய்வாள் பாவம்! வேறு யார் வீட்டிலும் போய்க் கேட்க பழக்கமில்லை. எஜமானி சந்தேகப்படுகிறாள் என்று தெரிந்து விட்டது. சடக்கென்று தன் கை வளையலைக் கழட்டி எஜமானியின்



முன்பு நீட்டி "மாமீ! இது ஒன்னரை சவரனிருக்கிறது. நீங்கள் தானே அம்மா சம்பளத்திலிருந்து மிச்சம் செய்து இதைச் செய்து கொடுத்தீர்கள். இதோ! இதை விலைக்கு வைத்துக்கொண்டு பணத்தைக்கொடுங்கள். இப்போது சந்தேகமில்லையே! நேரமாகிவிட்டது. அம்மா தனியாயிருக்கிருள்" என்று தேம்பி யழுதவாறே கூறினுள்.

இனிமேல் சந்தேகமேது? "சாவியை எங்காவது வைத்திருக்கிருரா பார்க்கிறேன்" என்று கூறி உள்ளே சென்று பணத்துடன் திரும்பி வந்து ஒன்னரை சவரத்திற்கான பணத்தில் எற்கெனவே உள்ளபாக்கியைக் கழித்துக்கொண்டுமிச்ச ரூபாயைக்கொடுத்தாள்.

அதாவது கிடைத்ததே என்று அபாரமான சந்தோஷத்துடன் "மாமீ! நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு நேரே அந்த புதிய டாக்டர் வீட்டிற்கு ஓடினுள். சில தடபுடல் டாக்டர்களை உடனே எளிதில் பார்க்கமுடியுமா! எத்தனை காவல்காரர்கள்? எத்தனை அட்டகாசங்கள்? இவர்களின் மனோவேதனையும், அவசரமும், அவர்களுக்கென்ன தெரியும்? வாசலில் இருந்த காவல்காரன் "தே...எங்கே ஓடுகிருய்? சற்று இப்படி உட்காரு. டாக்டர் இப்போ யாருடனே பேசுகிருர். பிறகுதான் உன்னைப் பார்ப்பார்" என்று அதட்டிக் கூறினுன்.

தலை விதியே என்று நின்ருள். நிற்கும் ஒவ்வொரு விநாடியும் அவளுக்கு ஒரு யுகம்போல் தோன்றியது. "சற்று போய் பாரப்பா! ஆபத்தாகவிருக்கிறது" என்று வருந்தியவாறு கூறினுள். அரைமணி நேரம் கழித்து இவளை உள்ளே அழைத்துச் சென்ருன்.

டாக்டர் "என்ன உடம்பு? கையைக்காட்டு...நாக்கை நீட்டு... அந்த பெஞ்சி மீது படுத்துக்கொள்ளு" என்று தனது பாடத்தை வரிசையாக ஒப்பித்தார். உடனே ஒரு நர்ஸ் ஓடிவந்து இவளைப் பிடித்துப் படுக்கவைக்க முயன்ருள். விலாசினிக்கு துக்கம் தொண்டையை அடைக்கிறது. ஒருபுறம் பயமாகவிருக்கிறது. "சார்! எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. தாயாருக்கு உடம்பு சரி இல்லை. நிரம்பவும் கவலைக்கிடமான நிலைமையிலிருக்கிருள். தயவுசெய்து நீங்கள் வீட்டுக்கு வந்து பார்க்கவேண்டும். உங்களை அழைத்துப் போகும்படி டாக்டர் பிரகாஷ் கூறியனுப்பித்தார். வரவேண்டும்!" என்று கெஞ்சலாகக் கேட்டாள்.

டாக்டர் "சரி. உன் அட்ரஸைக் கொடுத்துவிட்டுப் போ! வருகிறேன்" என்ருர். விலாசினியும் தன் விலாஸத்தை எழுதிக்கொடுத்து

விட்டு "சீக்கிரம் வரவேண்டும்" என்று சொல்லிவிட்டுச் சென்றாள். "தாயார் எப்படி இருக்கிறாளோ?" என்கிற வேதனை யொருபுறம் பாதிக்கிறது. தன் கையில் வளையல் இல்லாததைக் கண்டு கேட்கப் போகிறாளே என்கிற பயம் வேறு உதைக்கிறது. அதை யறிந்து அந்த அதிர்ச்சியினால் உடம்பு அதிகமாகிவிடப்போகிறதே என்ற திகில் ஒருபுறம் இத்தனைக்கும் இடையில் தனக்குச் சமயத்திற்குப் பணம் கிடைத்த சந்தோஷம் ஒருபுறம் தலைசிறந்து நின்றது.

சற்று அயர்வாக தர்மாம்பாள் படுத்திருந்தாள். "அம்மா! அம்மா!" என்று வாஞ்சையுடன் கூப்பிட்டாள். தர்மாம்பாள் கண்ணைத் திறந்து பார்த்தாள். "டாக்டருக்கு என்ன உடம்பு? எப்படி யிருக்கிறார்? இந்தப் பாழுங்கட்டை எப்படியாவது போகட்டும். மகா உத்தமராயும், ஏழைகளுக்கு உபகாரியாயுமிருக்கும் டாக்டருக்கு ஒன்றுமில்லாதிருந்தால் போதும். நீ அவரைப் பார்த்தாயா! இத்தனை நேரமென்ன?" என்று தள்ளாடியவாறு கேட்டாள்.

விலா:—நான் நேரில் பார்த்தேன். சாதாரணமான ஜுரந்தான். வேறு ஒன்றுமில்லை. அவரே சிபார்சு செய்து வேறு டாக்டரை யனுப்பியிருக்கிறார். இப்போது வந்துவிடுவார். இந்த உடையை மாற்றிப் படுக்கையையும் மாற்றிவிடுகிறேன். சற்று எழுந்திரு" என்று கூறி வேலைக்காரியின் உதவியால் ஒரு நிமிஷத்தில் மாற்றி சுத்தமாகப் படுக்கவைத்துவிட்டாள்.

பின்னும் சில நிமிஷத்திற்கெல்லாம் பம் பம் என்று ஹாரனடித்துக்கொண்டு டாக்டர் வந்தார். தர்மாம்பாளைப் பார்த்துப்பின் மருந்தை எழுதிக்கொடுத்துவிட்டு, "பலமான ஜுரமாகத்தான் வந்திருக்கிறது. ஆனாலும் பயப்படவேண்டாம். ஊசி குத்தினால் சரியாகிவிடும். அந்த மருந்து 5 ரூபாயாகிறது. இப்போதே செய்தால் கபம் குறையும்" என்றார்.

விலா:—இப்போதே கொடுங்கள். ரூபாய் ஆவதால் பாதகமில்லை. என் தாயாருக்கு உடம்பு குணமானால் போதும்—என்று பரிதாபமாய்க் கூறினாள். உடனே ஊசி குத்தப்பட்டது. ஏற்கெனவே டாக்டர் கூறியபடி இரண்டு ரூபாயுடன் இந்த 5 ரூபாயையும் சேர்த்து ஏழு ரூபாயாகக் கொடுத்தாள்.

டாக்டர் நாற்காலியில் உட்கார்ந்து ஏதோ யோசனையிலாழ்ந்தபடியே விலாசினியையும் அவள் தாயாரையும் இமைகொட்டாது பார்த்துக்கொண்டிருந்தார். விலாசினி கொடுத்த பணத்தை வாங்கிக்

கொள்ளாது "சரி...இருக்கட்டுமே...பணத்திற்கென்ன அவசரம்? அப்படி நான் கருராய் அடித்துப் பிடுங்கும் கோஷ்டியில் சேர்ந்தவனல்ல. பிறகு வாங்கிக்கொள்கிறேன். உடம்பு குணமானுல் போதும். உங்கள் முகத்தின் பரிதாபத்தைக் காண எனக்கு வருத்தமாயிருக்கிறது" என்ருர்.

தர்மாம்பாள் வாயைத் திறக்கவே இல்லை. "பகவான் என் பங்கிலிருக்கவேண்டும். அதைத்தான் நான் இரவு பகல் கோருகிறேன். என் தாயாரின் குணமே எனக்கு இஜ்ஜென்மத்தின் சொர்க்கப் பதவியாகும்" என்று கூறும்போது விலாசினியின் கண்ணீர் பொங்கி வந்துவிட்டது. துக்கத்தினுல் குரல் கம்மியது.

"அதைரியப்படாதேம்மா! இன்னும் ஒரு வாரத்திற்குள் குணமாகிவிடும். அவ்வப்போது இருப்பதை வந்து தெரிவி. நான் வருகிறேன்....பாட்டீ! பயப்படாதே. தைரியமாயிரு. பயமொன்றுமில்லை" என்று டாக்டர் கூறிவிட்டுப் போகும்போது விலாசினியை இமை கொட்டாது பார்த்துவிட்டுச் சென்ருர்.

விலாசினியின் துயரத்தில் வேறு எதுவும் தெரியவில்லை. ஆனுல் "டாக்டர் எத்தனை நல்லவர். பணத்தைக்கூடப் பாராமல் வைத்தியம் செய்யும் தயாள குணமுடையவராயிருக்கிருர். இதுவும் நம் பாக்கியந்தான்" என்று எண்ணினுள். மருந்து வாங்கிக் கொடுத்ததில் அன்று இத்தனை நாட்களைவிடக் குணம் தெளிவாகத் தோன்றியது. தலைவலி, ஜுரம் முதலிய எல்லாம் குறைந்திருந்தது கண்டு விலாசினியின் உள்ளம் அபாரமான சந்தோஷத்தை யடைந்தது. இன்னும் சில தினங்களில் முற்றிலும் குணமாகிவிடும் என்று நினைக்கும்போது உடல் பூரித்தது. நல்ல காலத்திற்குத்தான் அந்த டாக்டருக்கு உடம்புக்கு வரவும், இந்த டாக்டர் வந்து மருந்து மாற்றவும் ஏற்பட்டதாக ஒரு உணர்ச்சி உண்டாகியது.

மறுதினம் காலையில் தாயாரின் நிலைமையைக் கூறுவதற்காக டாக்டரிடம் சென்ருள். முதல் நாளைப்போல் காக்கவைக்காது அன்று உடனே உள்ளே அழைத்துச் சென்ருர்கள். இவளைக் கண்டதும் டாக்டர் மெத்த சந்தோஷத்துடன், "வாம்மா! இப்படி உட்காரு. அம்மாவுக்கு எப்படி இருக்கிறது? ராத்திரி தூங்கினுளா? ஆகாரம் தக்கியதா?" என்று கேட்டார்.

விலாசினியின் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடியது. "டாக்டர்! எனக்கு நல்லகாலம் பிறந்துவிட்டதென்று நினைக்கிறேன்.

இரவு நன்ருகத் தூங்கினர்கள். எழுந்திருக்கவே இல்லே. இப்போதும் தலேவலி இல்லே. ஜுரமும் குறைந்திருப்பதாக நினேக்கிறேன். இன்று கூட ஒரு ஊசி குத்தினல் ரொம்ப நல்லதல்லவா?

டாக்:—நானும் அப்படித்தான் நினேக்கிறேன். பிறகு வந்து பார்க்கிறேன், மாத்திரை கொடுத்திருக்கிறேனே அதை நிறுத்திவிடு.

“நல்லது. நான் போய் வருகிறேன். உடனே வாருங்கள்” என்று சொல்லிவிட்டு வீட்டிற்குக் கிளம்பி வருகையில் வழியில் மதுசூதனன் டாக்டர் வீட்டிற்கு அப்போதுதான் போகிருன். அவன் விலாசினியைப் பார்த்ததும் தடைகட்டிய நாகம்போல் நின்றுவிட்டான். சில விநாடிகள் சென்று ஒருவாறு சமாளித்துக் கொண்டு, “உடம்பு எப்படியிருக்கிறது. குணந்தாஞ?” என்று தானே வலுவில் கேட்டான்.

விலா:—ரொம்ப குணமாயிருக்கிறது. கெட்டிக்கார டாக்டர். நல்ல மருந்து கொடுத்து ஊசியும் போட்டார். இன்றுகூட ஊசி போடுவதாகக் கூறியிருக்கிருர்......டாக்டருக்குத் தேவலேயா? அவரிடம் சொல்லுங்கள்.

மது:—ரொம்ப சந்தோஷம். அவருக்கும் சற்றுதேவலே; ஆனல் இன்னும் வெளியில் வரவில்லே. அந்த டாக்டர் கருக்காகப் பணம் வாங்குவாரே. எவ்வளவு கொடுத்தீர்கள்?

விலா:—அதான் ஆச்சரியம். நான் கொடுக்க வந்ததைக் கூட மறுத்துவிட்டார். ‘உடம்பு குணமாஞல் போதும். பிறகு வாங்கிக் கொள்கிறேன்’ என்று கூறிவிட்டார். பைசாகூட வாங்கவில்லே. வெகு நிதானமாய்ப் பார்த்து மருந்து கொடுத்தார்.

மது:—ஆச்சரியத்திலும் ஆச்சரியமாயிருக்கே. நம்பவே முடியவில்லேயே! அவரா அப்படிச் செய்தார்.

விலா:—ஆம்...அவர்தான். வெகு நல்லவர். நான் வருகிறேன். அம்மா தனியாயிருக்கிருள்—என்று சந்தோஷமும் தெம்பும் கலந்த த்வனியில் கூறிக்கொண்டே போய்விட்டாள். அவள் சென்ற திக்கையே பார்த்துக்கொண்டு பித்துப் பிடித்தவன்போல் வீதியில் நின்ற மதுசூதனனுக்கு ஒன்றுமே தோன்றவில்லே....பிறகு தன் வேலேயை நோக்கிச் சென்ருன்.

விலாசினி வீட்டிற்கு வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் டாக்டர் வந்தார். ஊசி குத்தி மருந்து எழுதிக்கொடுத்துவிட்டு அன்றும் ரூபாய் வாங்காமல் சென்றுவிட்டார். விலாஸினியின் சந்தோஷம்

இரட்டிப்பாய்ப் பெருகியது. தன்னுடைய அதிர்ஷ்டந்தான் இத்தனை சீக்கிரம் குணங்கண்டுவிட்டது என்று அவள் எண்ணி எண்ணிப் பூரித்தாள். ஆனல் எத்தகையோருக்கும் தாம் எதிர்பார்த்தச் சந்தோஷம் அப்படியே நிலைப்பதுண்டா! அந்த மாதிரி நின்றுவிட்டால் உலகம் தலைகீழாகவல்லவோ சுற்றும்?

அந்த விதிக்கு விலாஸினிமட்டும் விலக்காகி விடமுடியுமா! நேரம் ஆக ஆக தர்மாம்பாளின் நிலைமையில் விபரீதமான மாறுதல்கள் உண்டாகி விலாஸினியின் சந்தோஷத்தைச் சிதறவடித்தன. "என்னம்மா செய்கிறது? ஏன் இப்படிப் புரளுகிறாய்?" என்று கேட்டவாறு தாயாரைத்தடவுகிறாள். தர்மாம்பாள் பேசவே இல்லை. சைகையினல் என்னமோ செய்கிறதென்று ஜாடை காட்டினாள்.

பொழுது ஏறிக்கொண்டே போகிறது. விலாஸினி கவலையும் திகிலும் கொண்டு டாக்டர் வீட்டிற்கு ஓடினாள். அவர் ஆனந்தமாய் ஸிகரெட்டு பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். வேலைக்காரனின் அனுமதியின்பேரில் உள்ளே சென்று "டாக்டர்! அம்மாவின் உடம்பு அதிகமாகிவிட்டதே. என்ன செய்வேன்?" என்று கண்ணீர் விட்டாள்.

டாக்:—அதிகமாயிருக்கிறதா! நான் நினைத்தேன். அப்படியே தானாகிவிட்டது...என்ன செய்வது? ஏழைக் குடும்பம்; ராஜ வைத்தியம்...விலாஸினி! ஒன்று செய்கிறாயா? நான் வெளியே பேஷண்டுகளைப் பார்ப்பது தவிர நோயாளிகளுக்கு ஸ்பெஷலாய்ப் பார்க்க இங்கேயே ஆஸ்பத்திரி ஏற்படுத்த உத்தேசம். இன்னும் காரியம் முடியவில்லை. உனக்காக நான் என் பங்களாவில் ஒரு ரூம் ஒழித்துத் தருகிறேன். உன் வீட்டைப்போலவே எல்லா சவுகரியங்களும் செய்து தருகிறேன். இங்கே கொண்டுவந்து விட்டால் நான் உயர்ந்த மருந்துகள் கொடுத்து ஊசி ஏற்றி அடிக்கடி பார்த்துக்கொள்வேன்.

விலாஸினிக்குச் சற்று வியப்பாகவே இருந்தது. "இங்கு கொண்டு வைத்துக்கொள்வதா! நான் பரம ஏழை என்பதை மறந்தீர்களா! என்னல் அத்தனை செலவிடமுடியாதே. என் கையில் பணமே இல்லையே"

டாக்டர்:—அதைப்பற்றிக் கவலையே வேண்டாம். என்னிடமுள்ள பணம் பூராவும் உன்னுடையதுதானென்று எண்ணிக்கொள்ளேன். உன் கையில் பணம் இல்லையே என்று குறையே படாதே! உன் கையின் பணம் எனக்கு வேண்டாம்...விலாஸினீ! உன் கை

களேதான் எனக்கு வேண்டும். தெரிந்ததா?—என்று கூறிக் கொண்டே விலாஸினியின் கையைப் பிடிக்க வந்தான்.

அதுவரையில் அயோமயமான நிலைமையில் மூடிப்போயிருந்த விலாஸினியின் உள்ளத்தில் பளிச்சென்று இந்த மூர்க்கனின் எண்ணமும் செய்கையின் விபரீதமும் தெரிந்துவிட்டது. இந்த துராக்ருதத்தை மனத்தில் எண்ணித்தான் இவன் கணக்காகப் பணம் வாங்கும் பேர்வழியாகவிருந்தும் வாங்காது போய்விட்டான்போலும். என்று ஆத்திரம் ரௌத்திராகாரமாய்ப் பீறிக்கொண்டு வந்தது.

கையை உதறிக்கொண்டு "சீச்சீ...துராத்மாவே...நான் ஏழையாக விருந்தாலுங்கூட என் கால் தூசிகூட உன் எண்ணத்திற்குப் பலியாகாது. என்னை என்னவென்று பார்த்தாய்? சிறிய தணல்தான் ஊரையே கொளுத்திவிடும் தெரியுமா! சிறிய மிளகாய்தான் நாக்கையே எரித்துவிடும். கடுகுசிறுத்தாலும் காரம் குறையாது என்பதை மறந்தாய்போலும். என் தாயின் உயிரை எமனிடமிருந்து வாங்கிக் கொடுக்கும் புண்ணியவான் நீ என்று நினைத்தேன். நோயாளிகளின் உயிருடன்கூட இன்னும் உள்ள இளமங்கைகளின் உயிர்களையும் கபளீகரம் செய்யும் எமன் நீதான் என்பதை இப்போது அறிந்தேன். என் தாயாரின் உயிர் கெட்டியாயிருந்தால் பிழைக்கிருள்; இல்லையேல் விதி விட்டபடியாகிறது. இனி இம்மாதிரி வாலாட்டாதே!" என்று படபடப்பாகக் கூறியபடியே போக முயன்ருள்.

டாக்டர் அசட்டுத்தனமும், கோபமும் கலந்த சிரிப்பு சிரித்தபடியே "விலாசினி!" என்று அழைத்தபடியே எழுந்து வந்து கையைப் பிடிக்க முயன்ற சமயம் விலாசினி சற்றும் கூசாமலும், காளியைப்போன்ற கோபத்துடனும் அந்த டாக்டரின் கன்னத்தில் அவனே ப்ரமிக்கும்படி 'பட்டார் பட்டார்' என்று அரைகள் விட்டுவிட்டு முகத்தில் காரி உமிழ்ந்தபடியே ஓட்டமாக ஓடிவிட்டாள்.

எசகுபிசகாக அகப்பட்டுக்கொண்டு அடி வாங்கிய டாக்டர் ஆத்திரத்துடன் துரத்திக்கொண்டு ஓடி வந்தான். அதற்குள் வேலைக்காரன் "சார்! நாலு பேஷண்டுகள் வந்திருக்கிருர்கள்" என்று வெளியிலிருந்து கத்தினன். "அவர்கள் எதிரில் எங்கே ரஸாபாஸமாகிவிடுமோ?" என்கிற பயத்தினல் அவன் சமாளித்துக்கொள்வதற்குள் விலாசினி போயே போய்விட்டாள். டாக்டரின் உள்ளம் கொதிக்கிறது. ஆத்திரத்தின் வேகம் அனலாய் எரிகிறது. கண்கள் சிவந்துவிட்டன.

## 19

கண்கள் சிவந்துவிட்டன. ஆத்திரத்தின் வேகம் அனலாய் எரிகிறது. "உண்மையாகவா இப்படி நடந்தது? எனக்கு நம்பவே முடியவில்லையே?" என்று டாக்டர் ப்ரகாஷ் ஆச்சரியமும் பரபரப்பும் கலந்த த்வனியில் கேட்டார்.

விலா :—டாக்டர்! நான் பொய் சொல்வதாகவா நினைக்கிறீர்கள்? அப்படியாயின் தாங்கள் சற்று ச்ரமத்திற்குப் பார்க்காமல் இப்போதே அங்கு சென்று அந்த துராத்மாவின் தரிசனத்தைப் பார்த்தால் உடனே தெரியும். கன்னத்தின் அழகும் காணலாம். இந்த நிமிஷம் வரையில் நான் அந்த அயோக்யனைப் பரம உபகாரி என்று நினைத்து பெருமேரசம் போனேன். இதற்கா அவனிடம் அனுப்பினீர்களென்று கோபமும் வந்தது. டாக்டர்! நீங்கள் எப்படியாவது ச்ரமப்பட்டு வருகிறீர்களா இல்லையா!' என்று மனோவேதனையின் வேகத்தில் அழுத்தமான குரலில் கேட்டாள்.

டாக் :—விலாசினி! பணம் வாங்காது மருந்து கொடுத்ததாக நீ தெரிவித்தாய் என்று மதுசூதனன் கூறி ஆச்சரியப்பட்டான். ஆச்சரியமாகத்தான் இருந்தது. கோபிக்காதே! விலாசினி! முன்பே இம்மாதிரியான புகார் அந்த மனிதன் பேரில் இருப்பதாகச் சிலர் கூறினார்கள். அது உண்மை என்பது நிதர்சனமாகிவிட்டது. நீ கவலைப்படாதே. நான் எப்படியாவது வருகிறேன்....மதுசூதனா! காரை எடுக்கச் சொல்லு—என்றார்.

மது :—சார்! ட்ரைவர் வீட்டுக்குப் போய்விட்டானே.

இதைக் கேட்ட விலாசினியின் நெஞ்சு திடுக்கிட்டது. "டாக்டர்! எனக்காக வேறு வண்டியில் வரமாட்டீர்களா?" என்று கண்ணீர் முட்ட தீனமான குரலில் கேட்டுப் பரிதாபமாய் நோக்கினாள்.

டாக் :—மதுசூதனா! இதுமாதிரி சமயங்களில் உதவிபுரிவதற்காகத்தான் உன்னைக் கார் ஓட்டக் கற்றுக்கொள்ளச் செய்தேன். உடனே காரை நீயே கொண்டுவா—என்றார்.

அடுத்த நிமிஷமே காரை மதுசூதனன் கொண்டுவந்தான். டாக்டரும் மதுசூதனனும் முன்பக்கத்தில் உட்கார்ந்தார்கள். விலாசினியை உள்பக்கம் உட்காரும்படியாக டாக்டரே கூறி உட்காரச் செய்தார். நெஞ்சில் துக்கம் அடைக்கக் கண்கள் குளம்போல் நீரைக்கக்க சோகப் பதுமைபோல் உட்கார்ந்திருக்கும் விலாசினி

யின் பிம்பம் காரில் உள்ள கண்ணுடியில் தெரிந்தது.

அதை இமை கொட்டாது பார்த்துக்கொண்டே தனக்குள் இன்பமும் துன்பமும் அடைந்தபடியே இதுவும் தன்பாக்யமென்றே எண்ணிக் காரை ஓட்டிஞன். காரும் வேகமாய் ஓடுவதுபோல் மன மும் வேகமாகவே ஓடி வழிதுறை தெரியாது அலேந்தது.

நாட்கள் ஓடி அதிவேகமாகத் தம் கடமையைச் செய்து காட்டின. இரண்டு நாட்களாய் சூரியன் வெளியே வரவே இல்லே. ஒரே மப்பும், மந்தாரமும், இடியும், மழையும், துடர்ந்து வாட்டு கின்றன. விலாசினி இன்று டாக்டர் வீட்டிற்கு வரவில்லே. "தினம் மருந்துக்கு வரும் அவள் இன்று ஏன் வரவில்லே? கிழவியின் உடம்பு எப்படியிருக்கிறதோ! அதிகாலேயில் வருபவள் மாலே 5 மணி ஆகியும் வராததால் ஏதோ சந்தேகமாகவிருக்கிறதே. ஐயோ! பாவம். அபலேயை அன்று பார்க்கும்போதே பரிதாபமாயிருந்தது. யாரை விசாரித்தால் தெரியும்? பாழும் மழையும் நிற்கவில்லேயே!" என்று மதுசூதனன் எண்ணியவாறே தன் காரியத்தைச் செய்து வந்தான்.

மனத்தில் பளிச்பளிச்சென்று விலாசினியின் உருவம் தோன் றித்தோன்றி மறைந்து இவனேப் பின்னும் கலக்கிவிட்டது. இரவு வேலே முடிந்தபிறகு எப்படியாவது அந்த தெருவு வழியாகவாவது சென்று விசாரித்துக்கொண்டு வரவேண்டுமென்று தீர்மானித்து அவ்வாறே சென்ருன்.

அப்போதும் தூறல் நிற்கவில்லே. எங்கும் இருள் கவ்விக் கொண்டிருந்தது. தான் சென்ருல் அவள் என்ன நினேப்பாளோ! என்கிற பயமும் தோன்றியது. எனினும் போய் பார்த்துத்தான் வரவேண்டும் என்கிற தடுக்கமுடியாத வேட்கையும் போராடிய தால் அந்த வீட்டின் தெருவுக்குப் போஞன். போகும்போதே மனத்தில் ஏதோ ஒன்று திக்குதிக்கு என்று அடித்துக்கொண்டது. இதயமும் வேகமாக ஓடியது.

மெல்ல சமாளித்துக்கொண்டு அந்த வீட்டிற்குச் சென்ருன். சந்தடியே இல்லே. வீதிக் கதவு சாத்தியிருந்தது. விளக்கு வெளிச்ச மும் தெரியவில்லே. தெருத் திண்ணேயில் யாரோ படுத்திருப்பது தெரிந்தது. உற்று நோக்கியதில் மருந்து வாங்கவரும் கிழவி என்று அறிந்தான். சற்று தைரியங்கொண்டு, "யாரு? கிழவியா!"... என்று இவனுகக் குரல் கொடுத்தான்.

கிழவி :—யாரது ?—என்று குரல் கொடுத்தபடியே எழுந்து உட்கார்ந்தாள்.

மது :—நான்தான் ஆயா !...மருந்து கொடுக்கறவன், பாட்டியம்மாளுக்கு உடம்பு எப்படியிருக்குன்னு டாக்டர் விசாரிச்சிகினு வரச்சொன்னாரு. இண்ணிக்கு சின்னம்மா வரவேல்லியே...அதனாலே வந்தேன். எப்படியிருக்கு ?....

கிழவி :—உம்...சமாச்சாரம் தெரியாதுங்களா ! அம்மா இன்னேரம் எரிஞ்சு சாம்பாலாகிக்கூட போயிருப்பாங்க...

இதைக் கேட்டதும் மதுசூதனன் திடுக்கிட்டான். "என்ன ! பெரியம்மா போயிட்டாங்களா ! ஐயையோ ! எப்போ...அடக்ரகசாரமே...சின்னம்மா எங்கே...உள்ளே இருக்கிறார்களா! சொல்லு" என்று பதறியவாறு கேட்டான். அவனை மீறிய ஒருவிதமான துக்கமும் பச்சாத்தாபமும் அவன் இதயத்தில் நிறைந்து கண்ணீர் வழிந்துவிட்டது.

கிழ:—சாமீ ! நான் இன்னான்னு சொல்லுவேன். பரதேசிக் கொயந்தெயே சாமி சோதனை பண்ணிட்டாரு. கெழுவியானாலும் பெத்த தாயாரை நம்பி இருந்துச்சு அந்த கொயந்தெ. அதுக்கு ஆதரவு பூட்டுது பாவம். நல்ல புத்திசாலி பொண்ணு. படிச்ச பொண்ணு. நீதி நெறி தெரிஞ்சு நடக்கற பொண்ணு. அதனாலே அம்மா செத்தபெறவு 'இந்த உலகத்திலே ஆதாரவே இல்லாத நிர்க்கதியான நான் இனி உயிர் வாழமுடியாது. அம்மா ! என்னையும் இட்டுகினுபூடு. நான் இந்த அநியாய உலகத்திலே இருக்கமாட்டேன். கண்ணெகட்டி காட்டுலே உட்டாப்பலே என்னெ உட்டுட்டுப் பூட்டாயே நான் இந்த மாய உலகத்திலே எப்படி வாழ்வேன் ?' இன்னு இன்னென்னமோ சொல்லி கதறிச்சி.

பாத்தவங்கல்லாம் கண்ணீர் உட்டு ஐயோ பாவமென்னு அலறினுங்க. பொணத்தே உடமாட்டேன்னு கட்டிகின்னு கதறிச்சு...அப்பறம் உட்ராங்களா ! ஊட்டெ குடி இருக்கறவங்க அக்கம்பக்கம் உள்ளவங்க அல்லாருஞ் சேந்து பொணத்தெ எடுத்தாங்க. சின்னம்மாளெ ஆத்தரவங்க இல்லே; தேத்ரவங்க இல்லே சாமி ! முட்டிகினு மோதிகினு அயுதுச்சு.

அல்லாம் ஆயி கொளத்துலே ஸ்நானம் பண்றப்போ அல்லார் கண்ணுலேயும் மண்ணெ போட்டுட்டு ஒரு நிமிசத்திலே கொளத்துலே உயுந்துட்டாங்க சாமீ !" என்று சொல்லும்போது கிழவியின்

துக்கம் உச்சஸ்தானத்தையடைந்து பெரியதாகப் புலம்பிவிட்டாள்.

மதுசூதனன் காதில் இந்த வார்த்தை கேட்டவுடனே "ஹா! என்ன! குளத்தில் விழுந்துவிட்டாளா! ஐயையோ! யார் தூக்கினுர்கள்...இப்போது எப்படியிருக்கிருள்?" என்று தான் ஓர் அன்னியன் என்பதையே மறந்துபோய் தன் உள்ளத்தில் அழுந்திக் கிடக்கும் வேகம் முற்றும் வெளியாகிய உணர்ச்சியுடன் கேட்டுப் பதைப்பதைக்க நின்ருன்.

கிழ:—பக்கத்திலே நான்தான் இருந்தேன் சாமீ! கெயப் பொணம் என்னுலே தூக்கமுடியாமே கத்தினேன். அதுக்குள்ளற இஸ்திகிணே பூட்டுதுங்க.

மதுசூதனன் அலறுகிருன்; உள்ளம் துடிக்கிறது. "ஐயோ! அப்ரம் என்னுச்சு கெழவி?"....என்று கட்டுமீறிய கலக்கமும் துக்கமும் பொங்கக் கேட்டான்.

கிழ:—ஒடம்பு தெரியாமே கத்தினேன். அந்தப் பக்கத்திலே இருந்தவங்களாலேயும் முடியல்லே. மழை வேறு ப்ராணனே வாங்கிச்சு. தெருவிலேயே போன யாரோ ஒரு புள்ளாண்டான்—மவராசன் அவன் நன்னுயிருக்கணும்—ஓடிவந்து நீஞ்சலடிச்சி மயிரே புடுச்சி இஸ்திகிணுவந்து கரேமேலே போட்டான்.

மது:—தண்ணீர் குடிக்காமல் இருந்தார்களா! ஞாபகமிருந்ததா! இப்பொழுது உள்ளே இருக்கிருர்களா!

கிழவி:—ஐயோ! சாமீ! அத்தியேன் கேக்கிறீங்க? தண்ணீரே நல்லா குடிச்சுபுட்டு வவுறு சாலுபோலே ஆயிபூடுச்சுங்க. அந்தம்மா இந்த லோகத்திலேயே இல்லே. தூக்கிபோட்ட ஐயா ஏதோ சாரணர் படையாமே, அதுலே இருக்கறவராம். அவர் இன்னமோ சுத்திகித்தி பார்த்தாரு. இதுக்குள்ளார கூட்டம் கூடிப்போச்சுங்க. பவழப்பேட்டை ஆஸ்பத்திரிக்கே கொண்டுபூட்டாங்க. சின்னம்மா கண்ணே முயிச்சாங்களோ இல்லேயோ! தெரியலே சாமி! இந்த ஊட்டெக் காத்திகினு இங்கு கடக்கிறேன். எனக்கு யாரு சொல்றவங்க? திக்கில்லாத பரதேசிக்கு அந்த கடவுள்தான் தொணேங்க. சாமீ! டாக்டரு ஐயாகிட்டே சொல்லி அவரையாச்சும் ரவெ விசாரிக்கச் சொல்றீங்களா?—என்று வெகு அன்புடனும் பரிதாபத்துடனும் கேட்டாள்.

மதுசூதனின் இதயம் சுழல் காற்றில் அகப்பட்ட துரும்பு போல் தத்தளிக்கின்றது. பதில் பேசவும் முடியவில்லை. கூறத்திற

மற்ற சங்கடமும் தடுக்கமுடியாத பிரேமையும் அவனை வாட்டின.... 'கிழவி! நான் அப்புறம் உன்னை வந்து பார்க்கிறேன்' என்று சொல்லி விட்டு, பித்துப்பிடித்தவன்போல் அவ்வீட்டைவிட்டு வெளியே வந்தான். எங்கும் ஒரே சூன்யமாயும், மனித சஞ்சாரமற்றக் காடு போலும் தோன்றி ஒருவிதமான பீதியையும் பயங்கரத்தையும் உண்டாக்கின.

"விலாஸினிக்கா ஆபத்து! விலாஸினியா பரதேசி!" என்று தனக்குள் சொல்லிக்கொள்கிறான். 'மிக்சர் மட்டுந்தானா! பவுடர் மாத்திரை ஒன்றுமில்லையா!' என்று விலாஸினி முன்பு கேட்ட மதுரத்வனி மீண்டும் செவியில் ஒலிக்க வாரம்பித்தது. 'எப்படியாவது போய் விலாஸினியைப் பார்த்துவிட்டு வரலாமா!' என்று ஒரு ஆவேசம் துடிக்கின்றது. "அவளை எப்படிப் பார்ப்பது? எந்த நிலைமையிலிருப்பாளோ! என்ன காக்ஷியைக் காண நேருமோ?" என்று நினைக்கும்போது, அவனால் சகிக்கமுடியாத வேதனை செய்தது.

'எங்கே போகிறோம்? என்ன செய்கிறோம்?' என்பதுகூட மறந்து, மழை பெய்து தலை நனையும் உணர்ச்சியும் அற்று ஜடம் போல் நடந்தான். ஒவ்வொரு மழைத் தூறலும் ஒவ்வொரு த்வனியாகக் கிளம்பி, "அடேய்! நீதானா பரீக்ஷைக்குத் தயாராய் நிற்பவன்? நீதானா மாயையை ஜெயித்த சூரப்புலி? இப்போது நீ எந்த சாகரத்தில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கிறாய் என்பதை சற்று நினைத்துப் பார். உன்னால் ஜெயிக்கமுடியாது...இதுதான் உலகத்தில் ஒரு கடினமான சோதனையின் சித்திரம்...தெரிந்ததா?" என்று ஒரே சமயத்தில் கேட்பதுபோல் தோன்றி நாலாபுறமும் ஏளனம்செய்து இடித்துக் காட்டுவதுபோன்ற ஒரு உணர்ச்சி உண்டாகும்போது அந்த மழையில்கூட அவன் சரீரம் தீப்பிடித்து எரிவதுபோல் நசித்தது.

ஸ்வாமியாரின் முகம் கண் முன்பு தெரிந்து, நகைத்துப் பரிகசிப்பதுபோல் ஒரு தோற்றம்...ஸ்வாமிகளின் புத்தகத்தில் கண்டுள்ள விஷயங்கள் வேறு நினைவிற்கு வந்தன. அதொருபுறம் வதைக்கிறது. மனத்தில் குழப்பமும், பயங்கரமும், ஒருவிதமான பீதியும் உண்டாகி 'திடும் திடும்' என்று தூக்கிப்போட்டது. ப்ரமை பிடித்த நிலையில் உலகம் ஒரே சுற்றாகச் சுற்றியது.

# 20

பிரமை பிடித்த நிலையில் உலகம் ஒரே சுற்றாகச் சுற்றியது. மனத்தில் குழப்பமும், பயங்கரமும், ஒருவிதமான பீதியும் உண்டாகி திடும்திடும் என்று தூக்கிப்போட்டது. கண்களின் நீரைத் தடை செய்யவே முடியவில்லை. "அம்மா! அம்மா! என்று அலற்றும் சப்தம் ஓயவே இல்லை...அம்மா! தீர்த்தம் வேணுமா!...கஞ்சி வேண்டாம்...கொஞ்சம் சாப்பிடம்மா...சாப்பிடாவிட்டால் உடம்பு எப்படி குணமாகும்? அம்மா...என்னோடுபேசமாட்டாய்...உனக்கு நான் பிடிக்கல்லையா! இதோ என்னைப்பாரு...எம்மா அழுரே.... ஐயையோ...அம்மா சிரிக்கிறாளே....அம்மா ஓடுகிறாளே...அம்மா.... அம்மா...கஞ்சிவேண்டாமா! ஆனா சரி. நான் கட்டாயப்படுத்தவில்லை" என்று தனக்குத் தானே பிதற்றியவாறு விலாசினி விகாரமாகப் பார்க்கிறாள்.

அடுத்த நிமிடமே நல்ல தெளிவுகொண்டு..."ஹா...அம்மா!.... அம்மா!" என்று மின்ஸாரம் தாக்கப்பட்டவள்போல் அலறுகிறாள். கண்ணீர் உதிர்த்தபடியே அவ்வதிர்ச்சியால் மீண்டும் மயக்கமாகிக் கண்ணையே திறக்காது படுத்துவிடுகிறாள்.

இரவு வீட்டிற்குச் சென்ற மதுசூதனனுக்குச் சாப்பாடு என்பதே பிடிக்கவில்லை. மனது நிலை இடங்கொள்ளாமல் தத்தளிக்கின்றது. எத்தனைக் கெத்தனை காதலைப்பற்றி வெறுத்தும் அலக்ஷியமாயும் நினைத்துப் பேசினானோ, அத்தனைக் கத்தனை அவனுடைய இதயத்தையே அவைகள் முற்றுகையிட்டுச் செய்யும் சங்கடத்தின் அனுபவம் தெரிந்தபிறகுதான் அவன் நெஞ்சமே அதன் சக்திக்கு வியந்தது. காதலைப்பற்றி கவியரசர் பாரதியார் பாடியுள்ள பாட்டுக்கள் அவன் கண்முன்பு உண்மை வடிவங்கொண்டு தாண்டவமாடின.

வீட்டில் கல்யாணத்தின் உபத்திரவமோ சொல்லமுடியாது. அவர்கள் ஒரு பக்கம் செல்லெரிப்பதுபோல் எரிக்கிறார்கள். 'எப்போது உதயமாகும், எப்போது போய்பார்க்கலாம்' என்ற ஏக்கத்துடன் இரவைக் கழித்தான்.

பொழுது புலர்ந்ததும் ஏதோ ஒரு ஆவேச சக்தி ஊக்கப்பட்டவனாய் ஆஸ்பத்திரிக்குச் சென்றான். அத்தனை பெரிய ஆஸ்பத்திரியில் விலாஸினி எங்கு படுத்திருக்கிறாள் என்பது எப்படித் தெரியும்?

டாக்டர் வீட்டிற்கு நேரமாகிவிட்டால் அவர் கோபிப்பார். என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தான்.

சித்தப் பிரமை பிடித்தவன்போல் வாசலிலேயே நிற்கும் சமயம் அவனுடைய ஆப்த நண்பன் கோபு—கையில் ஒரு தர்மாஸ்ப்லாஸ்கும் ஒரு பொட்டலமும் எடுத்துக்கொண்டு அவசரமாக வந்தவன்— அவனைப் பார்த்ததும், வியப்புடன் "அடேடேய்...என்ன சமாச்சாரம்? ஏன் இங்கு நிற்கிறாய்?" என்று கேட்டான்.

என்ன சொல்வதென்று தெரியாது சிறிது நேரம் தயங்கினான். எத்தனை சத்யசந்தனாயினும் இம்மாதிரி சமயங்களில் பொய் சொல்லாதிருக்கமுடியுமா! சொல்லித்தான் தீரவேண்டும் என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு, "நல்ல வேளையாக நீ வந்து சேர்ந்தாய்... நீ எங்கே போகிறாய்?. இங்கு யார் படுத்திருக்கிறார்கள்?" என்றான்.

கோ:—உனக்குத் தெரியாதா! நேற்று வீதி வழியோடு போகும்போது யாரோ ஒரு பெண் தாயார் இறந்த துக்கத்தினால் குளத்தில் விழுந்துவிட்டாளாம். நான் உடனே தூக்கிப்போட்டுச் சிகிச்சை செய்து இங்கு கொண்டுவிட்டிருக்கிறேன். ஐயோ பாவம்! அனாதைப் பெண்ணும். யாரும் திக்கு கிடையாதாம். தற்கொலை செய்துகொள்வதற்காகக் குளத்தில் விழுந்தாள் என்று எங்கே போலிஸார் ஜோடித்துவிடுவார்களோ என்று அவள் தடுக்கி விழுந்துவிட்டதாகச் சாக்ஷியுடன் கூறி ஒருவாறு சமாளிக்கச் செய்தேன். காலையில் எப்படியிருக்கிறாள் பார்க்கலாமென்று வந்தேன். நீ யாருக்காக நிற்கிறாய்?

இந்த விவரம் தெரிந்ததும் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் இவன் வந்தது ஒருபுறம் சந்தோஷத்தை உண்டாக்கியதெனினும் தானும் அவளுக்காகத்தான் வந்திருப்பதாகக் கூறினால் என்ன நினைப்பானோ என்ற அச்சமும் உண்டாகியது. ஆதலால் இங்கு யாரோ தன் சொந்தக்காரர்கள் படுத்திருப்பதாயும் அவரைப் பார்க்கவந்ததாயும் இடம் தெரியாததால் நிற்பதாயும் சொன்னான்.

கோ:—சரி; என்னோடு வாயேன் உள்ளே போகலாம்—என்று கூறி கூட அழைத்துச் சென்றான். கூறத்திறமற்ற விதம் ஏதோ ஒரு வேதனையும் மனச்சோர்வும் உண்டாகி வதைக்கும் உணர்ச்சியுடன் அவனுடன் மதுசூதனனும் உள்ளே சென்றான்.

நாம் முன்பு தெரிவித்ததுபோல் விலாஸினி தன்போக்காகப்

பிதற்றிக்கொண்டு படுத்திருக்கிறுள். பக்கத்தில் ஒரு நர்ஸ்மட்டும் உட்கார்ந்திருந்தாள். விலாஸினியின் பரிதாபத்தைப் பார்த்ததும் மதுசூதனனின் இதயம் அப்படியே வெடித்துவிடும்போலாகி விட்டது. ஆனுல் தன்னுடைய ரகஸ்யம் கோபுவுக்குத் தெரியக் கூடாதென்கிற ஒரு எண்ணமும் கூடவே அழுத்தியதால் அவன் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு கட்டிலின் பக்கத்தில் நின்றுன்.

கோபு நர்ஸைப் பார்த்ததும், "குட்மார்னிங்கு. எப்படியிருக் கிறுள். சரியான பிரக்ஞை வந்துவிட்டதா ?" என்று கேட்டான்.

நர்ஸ் :—ஸார் ! தெளிவு ஒன்றும் காணவில்லை. ரத்தக் கொதிப்பு அதிகமாயிருக்கிறது. இப்போது ஒருவரும் அவளிடம் பேசக்கூடா தென்றும் யாரையுமே உள்ளே விடக்கூடாதென்றும் பெரிய டாக் டர் கூறிவிட்டார். காப்பியை இப்படி வைத்துவிட்டுப் போங்கள். நான் தருகிறேன். ஸாயங்காலம் வாருங்கள்—என்று உத்திரவு போடுவதுபோல் சொல்லிவிட்டாள்.

அதே சமயம் விலாஸினி "அம்மா !...அம்மா !...வாயைத் திறம்மா ; கஞ்சி குடுக்கறேன்...ஐயயோ! உன்னையா கட்டித் தூக்கிப்போகிறுர்கள்...அம்மா!...உன்னையா கொளுத்திவிட்டார்கள் ஹா....அம்மா...அம்மா....எம்மா சிரிக்கிறுய் ?....என்றெல்லாம் வாய்ப்பிதற்றி எழுந்து எழுந்து ஓடமுயன்றுள். நர்ஸ் அமுக்கிப் பிடித்துக்கொண்டாள்.

இந்த பரிதாபகரமான காக்ஷியைக் கண்டதும் மதுசூதனனின் உள்ளம் உருகிக் கரைந்துக் கண்ணீராக அணைகடந்து வந்துவிட் டது. அவளுடன் பேசி சமாதானம் செய்யலாமா என்று உள்ளம் பதைக்கிறது. ஆனுல் என்ன செய்யமுடியும்...கோபு காப்பியை வைத்துவிட்டு'சரி. நான் மாலைவருகிறேன்' என்று கிளம்பிவிட்டாள். மதுசூதனன் தன் கண்ணீரை மறைத்துத் துடைக்கும் பொருட்டும் தன் நிலைமையை கோபு கவனிக்காதிருக்கும் பொருட்டும் மெல்ல நகர்ந்து அடுத்த வார்டுக்குள் புகுந்து மறைந்துவிட்டான். இவன் யாரையோ பார்க்க வந்ததால் அவன் அங்கு போயி ருப்பதாக எண்ணி கோபுவும் போய்விட்டான்.

மத்தியில் ஒரு பக்ஷம் எப்படியோ மடமடவென்று ஓடிவிட்டது. விலாஸினிக்குப் பரிபூர்ண குணமாகிவிட்டதால் வீட்டுக்குப் போக லாமென்று ஆஸ்பத்திரியில் கூறிவிட்டார்கள்.

அதுவரையில் இருந்த துக்கத்தைவிட இன்னும் பதின்மடங்கு

அதிகரித்த துக்கமும் சகிக்கவியலாத சங்கடமும் உண்டாகிவிட்டன. "வீட்டில்போய் நான் யாரைப்பார்ப்பது என் வரவைவேண்டி என் தாயார் இருந்து அழைக்கிருர்களா? நான் எப்படி இனி தனி வாஸம் செய்வேன்? இந்த பயங்கர உலகத்தில் நான் எப்படி உயிர் வாழுவேன்? கட்டும் காயிதாவும் ஆதரவும் நிறைந்துள்ள காலத்திலேயே பலவிதமான ஆபத்துக்கள் சூழ்ந்து வருத்தும் இப்பாழும் உலகத்தில் திக்கற்றப் பரதேசியாகிய நான் என்ன செய்வேன்?"... என்று நினைக்கும்போது அவளால் தாங்கமுடியாது துயரம் மிஞ்சி விட்டது.

நோயாளிகளெல்லோரும் 'வீட்டிற்குப்போகச் சொல்லப்போகிருர்களா!' என்று காத்திருந்து உத்திரவு கிடைத்ததும் கும்மாளமடித்துக்கொண்டு போவார்கள். அதற்கு நேர்விரோதமாய் விலாஸினி அழுவதைப் பார்த்ததும் நர்ஸுக்கு வியப்பாயிருந்தது. அவளுடன் இத்தனை நாள் பழகியதில் பரிதாபமாயுமிருந்தது. ஆனலும் என்ன செய்யமுடியும்? "விலாஸினி! வருந்தாதேம்மா! அனதைப் பெண் என்று ஒரு நாவல் படித்திருக்கிறேன். அந்த திக்கற்றப் பரதேசிப் பெண்ணின் ஞாபகமே உன்னைப் பார்க்கும்போது வருகிறது. "கடவுள் ஒருவன் இருக்கிருன். அவனை நம்பி அவனடி தொழுது போய்வாம்மா! எந்தவிதமான சோதனை காலம் நேரிடினும் சகித்துக்கொள்ளு. விலைமதிப்பற்ற மாணிக்கம்போன்ற உன் கற்பு இருக்கிறதே, அதைமட்டும் ஜாக்ரதையாகக் காப்பாற்றிக்கொள்ளு. அதற்காக உயிரையும் த்யாகம்செய்யத் தயங்காதே"... என்று அந்த அனதைப்பெண்ணுக்கு அவள் பாட்டி உபதேசம் செய்கிருள். அதையே நான் உனக்குச் சொல்கிறேன். கலங்காதேம்மா...என்று ஹிதமாகப் பேசிவிட்டுப் போய்விட்டாள்.

விலாஸினி வீட்டிற்கு வருவதாகவே நினைக்கவில்லை. பாழடைந்த காட்டிற்குள், குகைக்குள் நுழையப்போவதாகவேஎண்ணி விம்முறும் சமயம் மதுசூதனன் அங்கு வந்தான். தினம் ஆஸ்பத்திரியில் வந்து பார்த்துச் சிறிது பேசி பழகிவிட்டதால் அவனைக்கண்ட உடனே சிறு குழந்தையைப்போல் விக்கிவிக்கி அழுதாள்.

மதுசூதனனுக்கும் மனம் தவித்தது. பேசவும் கூடவில்லை. கண்ணீர் முத்துமுத்தாக உருண்டுவிட்டது. "விலாஸினி" என்று தன்னையறியாது வாயாறக் கூப்பிட்டுவிட்டான்...விலாஸினி பதிலே பேசாமல் பரிதாபமும் துக்கமும் தனது பரதேசித்தனத்தின் உணர்ச்

சியும் ததும்ப கமல இதழ்போன்ற கண்களைத் திறந்து தலை நிமிர்ந்து பார்த்தாள். கண்ணீர் தடைகட்ட முடியாதவாறு பெருகிஓடுகிறது.

"எனக்கு திக்கில்லையே! நான் என்ன செய்வேன்? எங்கு செல்வேன்?" என்று முறையிடுவதுபோல் அந்தக் கண்களின் பார்வையில் ஒரு கூர்மையான ஜோதி பளிச்சென்று மின்னி மதுசூதனனின் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து மின்ஸாரம் தாக்கப்பட்டவன்போல் குலுக்கியது. மீண்டும் துக்கம் தேங்கிய குரலால் 'விலாஸினீ!' என்று அழைத்தான். பதிலே பேசவில்லை.

மீண்டும் சற்று சமாளித்துக்கொண்டு, "விலாஸினீ! ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தே" என்ற பாடல் உங்களுக்குத் தெரியாதா! அம்மணீ! உங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்கே நான் வந்தேன். நான் டாக்டர் உத்திரவு பெற்று அவருடைய வண்டியையும் வாங்கி வந்திருக்கிறேன். வாருங்கள். மணியாகிறது" என்று அன்பும் அனுதாபமும் கலந்து கூறினன்.

விலாஸினிக்கு இந்த வார்த்தை வியப்பிலும் வியப்பாக விருந்தது. அத்தனை துக்கத்திலும் ஒருவிதமான பரபரப்புடன், "என்னை அழைத்துப்போகவா வந்தீர்கள்? எனக்கா மோட்டார் கொண்டுவந்திருக்கிறீர்கள்?... உண்மையாகவா!...எனக்குக்கூட அனுதாபத்துடன் ஆதரவு காட்ட ஒரு மனிதர் இருக்கிறாரா?" என்று கூறும்போது அவளுடைய நிலைமையில் ஒரு மாறுதலும் பார்வையில் ஒரு கூர்மையான வேகமும் ஏக்கமும் தவிப்பும் ஜ்வலிப்பும் ஒன்று கூடி பளிச்சென்று வெளிப்பட்டன.

மது:—விலாஸினீ!...நேரமாகிறது.

விலா:—ஐயா!....எனக்குக் கார் வேண்டாம்...கடவுள் என் தலையில் எழுதியிருக்கிறபடி நடக்கட்டும். எனக்காகத் தாங்கள் இவ்வளவு அன்புடன் சிரமம் எடுத்துக்கொண்டதற்கு மிக்க வந்தனம்.

மது:—விலாஸினீ! அப்படிச் சொல்லக்கூடாது. கடவுள் நேரில் வந்து யாருக்கும் இத்தனை எளிதில் கை கொடுக்கமாட்டார். பிறர் மூலமாகத்தான் எல்லாம் செய்வார். இந்த நிலைமையில் நீங்கள் தனியே போகக்கூடாது. நான் கொண்டுவிட்டுச் செல்கிறேன் வாருங்கள்—என்று கூறியபடியே அவளுடைய கூஜாவைத்தானே எடுத்துக்கொண்டு நடந்தான்.

விலாஸினிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பலஹீனமும்

துக்கமும் ஒருபுறம் வதைக்கிறது. அந்த வீட்டிற்குத்தான் மறுபடியும் எவ்விதம் போவது, இனி தனி வாழ்க்கை எவ்வாறு நடத்துவது என்று நினைக்கும்போது அவள் மூளையே சிதறிவிடும் போலாகிவிட்டது. தன் பொருட்டாக மதுசூதனன் இத்தனை அன்புடன் வந்திருப்பதும், இதுவரையில் வந்து விசாரித்து ஆதரவு காட்டியதும் அவளால் மறக்கவோ திரஸ்கரிக்கவோ முடியாது ஒரு விதமான பற்றுதலும் கவர்ச்சியும் உண்டாகியதால் வாய் திறக்காது அவன் பின்னுடன் சென்றாள்.

மதுசூதனன்தானே காரை ட்ரைவ்செய்துகொண்டு வந்ததால் விலாசினியை ஏறச்செய்து காரைவிட்டான். இருவரும் பேசாப் பதுமைகள்போலானார்கள். இருவருடைய மனத்திலும் இருவிதமான போராட்டங்கள் தாண்டவமாடிக்கொண்டிருந்தன. விலாசினியின் முகம் கண்ணாடியில் தெரிவதைப் பார்த்துப் பேரானந்தமடைந்தான். எனினும் முதல் முதல் விலாசினியைப் பார்த்தபோது அன்றலர்ந்த தாமரையைப்போல் பிரகாசித்த முகம் இன்று வாடி வதங்கி சோபையற்றுக் கிடந்ததைக் கண்டு சகிக்கவே முடியவில்லை.

அத்தனை விசனத்திலும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நிகரிலாத ஜீவசக்தியுடன் பிரகாசிக்கும் கண்களின் எழில்தான் மதுசூதனனைப் பிரமிக்கச் செய்தது.

ஒரு வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தி "அம்மணீ! இறங்குங்கள்" என்று அன்பொழுகக் கூறினான். அந்த வீடும், தெருவும் விலாசினிக்கு முற்றிலும் புதிதாகவிருந்ததனால் சற்று தியக்கத்துடன் "சார்! இது எங்க வீடல்லவே"...என்று தீனஸ்வரத்தில் கூறினாள்.

மது :—அம்மணீ! மன்னிக்கவேண்டும். உங்களுடைய மனத்தின் சங்கடத்தை நான் நன்கறிந்தேன். இனி நீங்கள் அந்த வீட்டிலிருந்தால் மூளையே கலங்கிவிடும் என்று உங்களுடைய பிதற்றலைப் பார்த்து டாக்டர், நர்ஸ் முதலியவர்கள் தீர்மானித்தார்கள். நான் தினம் வந்து போவதால் நான் உங்களுடைய நெருங்கிய பந்து என்று நினைத்து வேறு வீட்டில் மாற்றிவிடும்படி என்னிடம் கேட்டுக்கொண்டார்கள். அதனால் உங்களுடைய அனுமதியின்றியே நான் இந்த வீட்டை வாடகைக்குப் பேசி அங்கிருந்த சாமான்களை உங்கவேலைக்காரியின் உதவியால் இங்குமாற்றிவிட்டேன். அதற்காக மன்னிக்கவேண்டும்.—என்று கூறி விலாசினியின் முகத்தை உற்றுப் பார்த்தான். விலாசினியும் தன் உணர்ச்சிமிக்க வேகத்துடன்

பார்த்தாள். கண்ணீர் அருவிபோல் ஓடியது. என்ன பேசுவதென்றே தெரியவில்லை. அவள் பார்த்த பார்வையில் நம்பிக்கையும் பிரேமையும் ஜ்வலித்தன.

தலை குனிந்த பதுமைபோல் இறங்கினாள். மதுசூதனன் முன்னால் கூஜாவை எடுத்துக்கொண்டு உள்ளே சென்று கதவைத் திறந்தான். வேலைக்காரக் கிழவி, வாஞ்சையுடன் பேசத்துடங்கி, "வாம்மா கொயந்தே!....நீ என்னத்தான் புண்ணியம் பண்ணியோ! இந்த மவாராஜாவோடே ஒதவி ஒனக்கு கிடச்சுது. ஒனக்காக அவரு என்னத்தான் அலையுரரு தெரியுமா! அழாதேம்மா! வா! இந்த ஊடு ரொம்ப நல்ல ஊடு. இதிலே இருக்கற அம்மா இஸ்கோல் வாத்தியாரம்மா...அவுங்க தங்கமானவங்க. அவங்களுக்கும் ஒம்போலே ஒரு பொண்ணிக்கிது. அது நல்லா பாட்டு பாடும். ஒனக்கும் பொயுது போக்கா இருக்கும்னு ஐயா ரோஜனே பண்ணித்தான் இந்த ஊட்டெ பேசினுங்க. கண்ணீர் உடாதே...வா" என்றாள்.

மதுசூதனனுக்கோ நேரமாகிவிட்டது. அரைமணியில் வருவதாக டாக்டரிடம் சொல்லிவந்தான். மேலேயே நேரமாகிவிட்டதால் பயம் ஒருபுறம் வதைக்கிறது. "விலாஸினீ! நேரமாகிறது. நான் போய் வருகிறேன். நீங்கள் தைரியமாயும் தெம்பாயும் இருங்கள். இந்தமாதிரியான நிலைமையில் உடல் நலத்தைக் கவனிக்கவேண்டியது அத்யாவச்யமாகும். நீங்கள் ஆக்ஷேபிக்காது விரும்பினால் நான் சாயங்காலம் வருகிறேன். ஒரு மாதத்திற்கு ஒரு எடுப்பு சாப்பாடு கொண்டுவைக்கும்படிக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்கள் சாப்பிட்டுக் கிழவியும் சாப்பிடலாம்; கவலையின்றி இருங்கள். நான் வரட்டுமா?" என்று கேட்டான்.

விலாசினிக்கு இவைகளைக் கேட்டதும் முன்னிலும் பதின்மடங்கு அதிகரித்த உணர்ச்சியுடன் 'ஐயா! என் தாயார் எங்கேயோ தேவதையாயிருந்து தங்கள் மூலம் என்னைக் காப்பாற்றுகிறாள் என்றே நான் நினைக்கிறேன். இந்த அபலையிடத்தில் தங்களுக்கிருக்கும் பரிதாபமும், வாஞ்சையும், காணக் காண என்னுள்ளம் என்னையறியாது பொங்கிப் பூரிக்கிறது. தாங்கள் செய்துள்ள இத்தனை அனுகூலங்களுக்கும் உபகாரத்திற்கும் நான் எப்படித்தான் கைம்மாறு செய்வேன்?"...என்று கூறும்போது நீர்த்துளிகள் முத்துப்போல் சிந்தின.

மது:—இதென்ன பிரமாதமான வார்த்தைகள்? இதெல்லாம்

வேண்டாம்...நான் வரட்டுமா !

விலா :—நல்லது. இந்த ஏழைமீது கருணை இருக்கட்டும். சாயங்காலம் கட்டாயம் வாருங்கள்—என்றாள். வாய் அதிகம் பேசவில்லையெனினும் இதயம் அபாரமான அன்புகொண்டு கண்களின் மூலமாகப் பேச்சு நடத்தும் ரகஸ்யத்தை அந்த இரு உள்ளங்கள்தானே அறிய முடியும்.

"கிழவி! அம்மாளைப் பார்த்துக்கொள்ளு. நான் சொல்லியதெல்லாம் ஞாபகமிருக்கட்டும். நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் விலாசினியின் வாழ்க்கைச் சித்திரத்தின் பிரதிபிம்பம் தோன்றியது. நெஞ்சை யழுத்தும் துக்கமும், கூறத்திறமற்ற சங்கடமும் சூழ்ந்து கொண்டன.

## 21

நெஞ்சை யழுத்தும் துக்கமும், கூறத்திறமற்ற சங்கடமும் சூழ்ந்துகொண்டன. "பொழுது போனால் பொழுது விடிந்தால் 'கல்யாணம்! கல்யாணம்!' என்கிற ஒரே கோஷந்தான்! அதைத் தவிர வேறு வார்த்தை இல்லையா! எனக்குக் கல்யாணமும் வேண்டாம்; கர்மாதியும் வேண்டாம். என்னைத் தொந்தரவு செய்யாதிருந்தால் போதும்" என்று மதுசூதனன் முணுமுணுத்தான்.

ஆனால் அவனை விடுகிறவர்கள் யார்? கிட்டுதான் காத்துக்கொண்டிருக்கிறானே! ஏதாவது சமயம் கிடைத்தால்போதும் என்று அவனுடைய நாக்கு துடிதுடிக்கிறது. "மாமீ! இவன் வார்த்தையின் ரகஸ்யம் உங்களுக்குத் தெரியவில்லையா! கல்யாணம் வேண்டாத பரிசுத்தப் பிரம்மச்சாரி; பரமயோகி இவர்...முகத்தைப் பாரு. தேவடியாள் சிநேகிதத்தின் ப்ரபாவத்தினால், முன்பு தாளத்தைத் தட்டிக்கொண்டு சதா பஜனை செய்து வேஷம் போட்டதெல்லாம் இப்போது மறைந்து மண்ணாகிப் போய்விட்டது. இதிலிருந்தே அவன் புனைசுருட்டும் பித்தலாட்டமும் தெரியவில்லையா?" என்று

துடுக்காகக் கூறி ஏளனமாக நகைத்தான்.

இந்தக் கொடிய பாணம்போன்ற வார்த்தையைக்கேட்டு மனம் சகிக்கமுடியாத மதுசூதனன் தன்னை மீறிய ஆத்திரத்தை அடைந்து கிட்டுவை நோக்கி "அடே மடப்பயலே! என்ன சொன்னுய்? இனி இம்மாதிரி அநியாயமாய்ப் பேசமாட்டாயே...பேசமாட்டாயே?" என்று கூறிக்கொண்டே பளாலென்று கன்னத்தில் இரண்டறை விட்டுவிட்டான்.

அவ்வளவுதான். கிட்டு பதிலுக்கு மதுசூதனனை நன்ருக நையப் புடைத்துத் தலைமயிரைப் பிடித்து உலுக்கிப் பழிதீர்ப்பதைக் கண்ட ராஜம்மாள் பதறிப்போய் பெரிதாகக் கத்திவிட்டாள். லக்ஷ்மியும், திருவேங்கடமும் ஓட்டமாக ஓடிவந்து கிட்டுவைத் தடுத்து "இந்த அநியாயம் உண்டா! இப்படியா கண்ணுமண்ணு தெரியாது அடித்துக்கொள்வது? டேய் கொலைகாரா! பழிகாரா! நான் கை நீட்டி வாங்கிய மகனைக் கொலை செய்யவாடா பார்க்கிருய்? உன்னை வீட்டுடன் கொண்டுவைத்துக் காப்பதன் பலன் இதுதானு?" என்று புத்திரவாஞ்சையின் மிகுதியால் துடுக்காகக் கேட்டுவிட்டார்.

கிட்டுவுக்குக் கோபம் மீறிக்கொண்டு வந்து தாண்டவமாடத் தொடங்கி வாயில் வந்தவாறெல்லாம் திட்டிப் பெருத்த சண்டை போட்டு அந்த ஆக்ரோஷத்துடன் தன் மனைவியை நோக்கி "நீ இனி அரைக்ஷணங்கூட இந்த வீட்டிலிருக்கக்கூடாது. உடனே புறப்படுகிருயா இல்லையா? இனி இந்த புலிக் குகையில் ஒரு க்ஷணங்கூட நான் நிற்கமாட்டேன். நீ வந்தால் சரி; இல்லையேல் உனக்கும் எனக்கும் இனி முகாலோபம் கிடையாது. இத்தகைய அக்ரமக்காரப் பாவிகளிடம் வாசம் செய்வதைவிடக் குப்பைவாரிப் பிழைக்கலாம்" என்று ஏதோதோ கூறியபடி லக்ஷ்மியின் கையைப் பிடித்து இழுத்தான்.

அவள் ராஜத்தைக் கட்டிக்கொண்டு "இந்த அல்பத்திற்கெல்லாம் இப்படியா கோபித்துக் கொள்வது? எங்கம்மாவை அந்தத் தேவடியாள்கள்ளனிடம் காட்டிவிட்டு நாம் போய்விட்டால் அவள் பிழைப்பு என்னுகும்? அப்பா மூடத்தனமாகச் சொல்லிவிட்ட இந்த வார்த்தையை நீங்கள் லக்ஷயம் செய்யக்கூடாது. நில்லுங்கள்" என்று கத்தினுள்.

கிட்டு :—சீச்சீ! வெட்கங்கெட்ட நாயே! உனக்கு மானமெல்லாம் ஆகாசத்தில் பறந்துவிட்டதா! வருகிருயா? இல்லையா?...

ஒரே பேச்சு—என்று அவள் கையைப்பிடித்துத் தரதரவென்று இழுத்துக்கொண்டு போய்விட்டான். ராஜமும், திருவேங்கடமும் என்ன செய்வார்கள் பாவம்!

மதுசூதனனுக்கு மிகவும் பலமான அடி பட்டுவிட்டதாலும் ஆத்திரம் மிதமிஞ்சிவிட்டதாலும் அவனும் தன்னுடைய இயற்கையின் சாந்தத்திற்கு மீறி கிட்டுவை அடித்துவிட்டானே யன்றி பிறகு அவன் மனது பலவிதமாகக் குழம்பித் துடித்தது. அவனுடைய இதயமே அவனைக் குத்திக்காட்ட வாரம்பித்தது. நோய் ஒரு பக்கம் வதைக்கிறது. கும்மாக்கள் எழும்பி உபத்திரவிக்கின்றன.

இவைகளைச் சமாளித்துக்கொண்டு எழுந்திருப்பதற்குள் லக்ஷ்மியை இழுத்துக்கொண்டு கிட்டு வேகமாகச் சென்றுவிட்டான். ராஜம்மாளின் துக்கம் உச்சஸ்தாயியை எட்டியது. கை நீட்டி வாங்கி வளர்த்த வாஞ்சையைவிடத் தன் உதரத்தின் உருவமாகப் பெற்ற வாஞ்சையும், பாசமும் வேறல்லவா! வளர்த்த பாசம் ஒட்ட வைத்த பசை போன்றதாகும். பெற்ற பாசம் நகமும் சதையும் போன்று பிரிக்கமுடியாத பசையல்லவா?

'தபஸ் பண்ணி உன்னைக் கையேந்தி வாங்கியதன் பலன், கடுகத்தனைக் குழந்தையை அடித்துத் துரத்திவிட்டு என் வயிற்றெரிச்சலைக் கிளறுவதற்காகவா முடிந்தது? என் லக்ஷ்மியை விட்டு நான் இனி எப்படி உயிர் வாழ்வேன்? லக்ஷ்மியில்லாத வீடு மூதேவி நிறைந்த காடுபோலல்லவா ஆய்விட்டது? ஐயோ!...என்ன செய்வேன்? தலை தினவுக்குச் சொறிய கொள்ளிக்கட்டையை உபயோகித்ததுபோலாகிவிட்டதே!' என்று புத்திரி வாஞ்சையின் மிகுதியால் தலைகால் தெரியாது கூவிப் புலம்பினாள்.

மதுசூதனனின் தலையிலும், முதுகிலும், நெத்தியிலும் கருணைக்கிழங்கில் முண்டுகள் கிளம்புவதுபோல் கிளம்பியிருப்பதை அவள் சற்றும் நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. உள்ளேபோய் படுத்துவிட்டாள். திருவேங்கடமோ, இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவிக்கிறார். 'மகனுடைய துண்டத்தைக் கண்டிப்பதா! மருமகனைக் கண்டிப்பதா! காரியம் அசட்டுத்தனமாக நடந்துவிட்டதே' என்று மெல்லவும் மாட்டாது விழுங்கவும் மாட்டாது தத்தளிக்கின்றார்.

"மதுசூதனா! நீ செய்ததுதான் மிகவும் தப்பிதம். என்னவிருந்தாலும் கிட்டு நம்முடைய மருமகப்பிள்ளைதானே! மரியாதைப் பட்டவனை மரியாதைக் குறைவாய் நீ அடிக்கலாமா! அது மிகவும்

குற்றமான காரியமாயிற்றே! எத்தனைக்கெத்தனை நீ பக்திமான்... அப்படி இப்படி என்று வேஷம்போட்டுக் கல்யாணம் வேண்டாமென்றுக் கூத்தாடினாயோ, அத்தனைக்கத்தனை இப்போது உன்னுடைய நடத்தையே கட்டோடு மாறிப்போய்விட்டது. இதை அவன் ஏன் கேட்கக்கூடாது? தேவடியாள் வீடு செல்வதாக அவன் கூறியது உனக்குப் பொத்திக்கொண்டதோ!

மதுசூதனா! எனக்கு விஷயங்கள் தெரியாதென்று நினைக்காதே. தேவடியாள் என்று அவன் கூறியது போதாது. ஒரு கொலைகாரன் மகளின் பின்னால் நீ சுற்றும் ரகஸ்யத்தை உலகமே அறியாது கண்ணை மூடிக்கொண்டிருப்பதாக நினைத்து ஏமாறாதே. சகலமும் எனக்குத் தெரியும்.''

என்று சிம்ம கர்ஜனையைப்போல் கர்ஜித்துக் கூறும் வெடிகுண்டுகள் போன்ற வார்த்தைகள் அவன் இதயத்தில் வேல் பாய்ச்சுவதுபோல் துள்ளச்செய்தன. சித்திரவதை செய்யும் சங்கடத்தைத் தாங்காது, ''அப்பா! அப்பா! அநியாய வார்த்தைகளைச் சொல்லி என்னை வதைக்காதீர்கள்?'' என்று கூறி முடிப்பதற்குள் ''டேய். அதிகப்பிரஸங்கி! உன்னை வதைப்பதற்காகவாடா இத்தனை பாடுபட்டுக் கையேந்தி வாங்கி வளர்த்தேன்? மதுசூதனா! உன்னை நானே கண்டித்துத்திருத்த நினைத்தேன். அதற்குள் காரியம் கெட்டுவிட்டது. நீ அந்தக் கொலைகாரனின் பெண் விலாஸினியின் வீட்டிற்கு அடிக்கடி போவதும் அவளுக்கு உன்னை மீறி உபகாரம் செய்வதும் ஒருவருக்கும் தெரியாதென்று நினைக்கிறாய்? அந்த மோகத்தில் மூழ்கியதனால்தான் விவாகம்வேண்டாமென்று கூறுகிறாய் என்ற வார்த்தையை நான் மட்டும் கூறவில்லை; இந்த ஊரே கூறுகிறது. அவளை விவாகம் செய்துகொள்ளலாமென்கிற மனப்பால் குடிப்பில் நீ உன் கடமைகளை யெல்லாம் மறந்து தத்தாரிபோல் திரியவாரம்பித்துவிட்டாய். உனக்குத்தான் வெட்கம், மானம் ஒன்றுமில்லையென்றால் எனக்குமா இல்லாது போய்விட்டதி. உன்னுடைய நடத்தை வரவர மிகவும் கேவலமாகிவிட்டது. உனக்குக் கட்டிய மனைவி ஒரு தினுசாகக்கெட்டுவிட்டாள் என்றால், நீ ஒரு தினுசாக ஆரம்பித்துவிட்டாய். இந்த அவமானம் என் நெஞ்சைப் பிய்த்துத்தின்கிறது'' என்று ஏதேதோ கோபத்துடன் கத்தினார்.

மதுசூதனனின் உள்ளத்தில் ஏக காலத்தில் பதினாயிரம் தேள்

கொட்டியதுபோன்ற பாதையுண்டாகியது. தனது ரகஸ்யம் எப்படியோ தெரிந்துவிட்டதே என்று நினைக்கப்பயமும் விலாஸினியைப்பற்றிக் கூறிய பாணம்போன்ற சொல்லால் கூறத்திறமற்றச் சங்கடமும் உண்டாகி மனத்தைக் கலக்கியது. ஒன்றுமேதோன்ருதவனய் அங்கு நிற்க மனமின்றிப் பதிலே பேசாது சரேலென்று போய்விட்டான்.

அவன் மனத்தில் விவரிக்க முடியாத வேதனை செய்துக்கொல்வதில், முக்கியமாக 'விலாஸினி கொலைகாரனின் மகளா! விலாஸினியின் தகப்பனுரா கொலை செய்திருப்பார்? ஐயோ! அந்த விஷயத்தைத் தகவலாக விசாரித்துக்கொள்ளாமல்போய்விட்டேனே. என் இதயத்தையே கொள்ளைகொண்ட மனேகரியை நான் எப்படி மறக்க முடியும்? அவள் தகப்பனர் ஒரு நாளும் குற்றம் செய்திருக்கவேமாட்டார். அவர்மீது யாரோ வீணை பழியைச் சுமத்தியிருப்பார்களேயன்றி ஒருபோதும் உண்மையாகவே இருக்காது. இது நிச்சயம். முக்காலும் நிச்சயம். விலாஸினி கொலைகாரனின் பெண்ணுகவிருப்பின் அவள் முகத்தில் அத்தனை சோபை நிறைந்தகளை இருக்கவே இருக்காது. இது வெறும்பொய். சுத்த பொய்" என்று ஆவேசத்துடன் உரத்துக் கூறிவிட்டான்.

"போய்யே இல்லை; முற்றிலும் உண்மை. அதை நேரில் பார்த்த பலபேர்களில் நானும் ஒருத்தன். மதுசூதன! பதருதே. என்னை நீ வெறுத்தாலும் உன்னை வெறுக்க என் நெஞ்சு இடங்கொடுக்கவில்லை. விலாஸினியின் தகப்பன் மல்லிகாபுரியின் சிறைச்சாலையில் இப்போதும் செக்கிழுக்கவும், மூட்டைத்தூக்கவும், கல்லுடைக்கவும், சாக்கடை வாரவுமான வேலைகளைச் செய்துகொண்டு களியும் கூழும் குடித்துக் காலத்தைக் கடத்துகிருன். இது பொய்யான விஷயமே இல்லை. உன் நன்மைக்காக நான் பாடுபடுகிறவன் என்பதை மறக்காதே... நீ ஓடிவந்த வேகம் என் மனத்தைப் பிசைந்தது. அதனல் பின்னலேயே ஓடிவந்தேன். மதுசூதன! வீட்டுக்கு வா!" என்று திருவேங்கடம் அன்பு கனிய அழைத்தார்.

தன் பின்னேடு திருவேங்கடம் வருவார் என்று மதுசூதனன் சற்றும் நினைக்கவில்லையாதலால் அவனுக்கு வியப்புக்குமேல் வியப்பாகவிருந்தது. சடக்கென்று எழுந்து செல்ல முயன்ருன்; ஆனல் திருவேங்கடம் விடவில்லை. "மதுசூதன! ஓடாதே நில்லு...நீயும் தகப்பனர் ஸ்தானத்திற்கு வந்தால் அப்போது அந்த உணர்ச்சி

தெரியும். உன்னுடைய நன்மைக்குப் பாடுபடும் மனிதன் நான்... அந்த எண்ணத்தை விட்டுவிடு" என்றார்.

மது:—இந்தக் கட்டுக்கதையை நான் நம்பவே இல்லை. ரகஸியம் முற்றும் உங்களுக்குத் தெரிந்தபிறகு இனி மூடுமந்திரம் எதற்கு? என் உள்ளம் விலாஸினியிடம் ஐக்கியமாகிவிட்டது. அதை இனி என்னால் மாற்றவேமுடியாது. என் உயிர் ஜீவநாடியே அந்த ஆரணங்காவள். நீங்கள் விரும்புகிறபடியே நான் விவாகம் செய்து கொள்ளவேண்டுமாயின் விலாஸினியையே மணக்க ஏற்பாடு செய்யுங்கள். அவள் பிதாவின்மீது சொல்வது வெறும் அபாண்டமானதுதான். இதை நான் நம்பவேமாட்டேன்.

திரு:—தம்பீ! 'இளங்கன்று பயமறியாது' என்பது சரியாயிருக்கிறது. ஒரு பெண்ணுக்கு ஆசைப்பட்டு அந்த விவகாரத்தில் தனக்குப் போட்டியாய் வந்த ஒருவனைக் கொன்றுவிட்டான். இது பொய்யே யல்ல. நம்முடைய குலக் கௌரவமென்ன? நம்முடைய குடும்பத்தின் முன்னோர்களிருந்த பெருமை என்ன? இவைகளை எல்லாம் மறந்து கொலைகாரனின் சம்மந்தத்தை நீ நாடலாமா! முன்பெல்லாம் நீ இருந்ததைப் பார்த்தால் எங்கே சாமியாராகிவிடுவாயோ என்று பயந்தேன். அதற்கு நேர் விரோதமாய் சுத்த காமியாகிவிட்டாயே! அன்று நீ உன் குருநாதரிடம் பேசியதும், அவர் பதிலுரைத்ததும் இதற்குள் மறந்துவிட்டாயா?...

இந்த வார்த்தைகள் மதுசூதனனின் இதயத்தைப் பிளந்தன. "அப்பா! நீங்கள் வீட்டிற்குப் போங்கள். நான் பிறகு வருகிறேன்" என்று மட்டும் கூறினான். திருவேங்கடமும் அதிகமாக வற்புறுத்தினால் என்ன நடக்குமோ என்று அஞ்சியவராய் "மதுசூதனா! நீயும் வா. இருவரும் கோயிலுக்குப் போய் ஸ்வாமி தரிசனம் செய்து வரலாம்" என்று அழைத்தார்.

அவனுக்கும் மன நிம்மதியில்லாதிருந்ததால் தகப்பனாருடன் கோயிலுக்குப் போகலாமா என்று தோன்றியது. ஆனால் அடுத்த நிமிடம் மறுத்துவிட்டான். "அப்பா! இந்த சமயம் என்னை மன்னித்து விட்டுவிடுங்கள். நான் எங்கே தற்கொலை செய்துகொள்வேனோ என்ற பயம் உங்களுக்கு வேண்டாம். நான் அத்தனை முட்டாளல்ல. பயப்படாமல் என்னை விட்டுப்போங்கள். நான் பிறகு வீட்டிற்கு வருகிறேன்" என்று சற்று அழுத்தமான குரலில் கூறினான்.

உயிருக்குப் பயமில்லை என்று தெரிந்ததால் ஒருவாறு நம்பிக்கை

யுடன் திருவேங்கடம் போய்விட்டார். ஆத்தங்கரையில் உட்கார்ந்திருக்கும் மதுசூதனனுக்கு "கொலைகாரன் மகளா விலாஸினி! இருக்காது; ஒருநாளும் இருக்காது. அப்படித்தான் அவளுடைய பிதா கொலைபாதகனாக விருப்பினும் மகா பரிசுத்தவதியாகிய விலாஸினிக்கு அந்த அழுக்கு என் பாதிக்கும்? அவளா கொலை செய்தாள்? அவளா குற்றவாளி! அந்தோ! நினைத்தால்கூட ஒட்டிக் கொள்ளும்போலிருக்கிறதே. சேச்சே! இது வீண் படாப்பழி. இது விலாஸினியின் காதில் பட்டால் அவள் இதயம் வெடித்துவிடும். இளந்தளிர்போன்ற மனது கருகிச் சாம்பராகிவிடும். இந்த அநியாயத்தை ஒருபோதும் சகிக்கமாட்டாள்" என்று தனக்குள் பல விதமாக நினைத்து ஒருவிதமான முடிவுக்கும் வராது தவித்தான்.

பொழுதோ ஏறிக்கொண்டே சென்றது. "விலாஸினியின் வீட்டிற்குப் போகலாமா? வேண்டாமா?" என்று யோசனை செய்தான். இத்தகைய மாறுதலுடன் சென்றால் அவள் கேள்விக்குப் பதில் சொல்லும்படி நேரும். அவளோ மகா யூகசாலி. ஏதோ கலக்கமிருப்பதை அரை க்ஷணத்தில் அறிந்துகொள்வாள்; ஆகையால் போகாதிருப்பதே நலம்" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

வெகுநேரம் சென்று வீட்டிற்குப் போனான். வீட்டில் அடுப்பே மூட்டவில்லை. ராஜம் கைகேயியைப்போல் கோபத்திருக் கோலம் பூண்டு படுத்துவிட்டாள். திருவேங்கடம், அவளைச் சமாதானம் செய்யும் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்தார். ராஜம் ஒரே பிடிவாதமாய் "என்னை என்ன செய்தாலும் சரி, என் லக்ஷ்மியும் கிட்டுவும் வந்தாலன்றி நான் தீர்த்தபானம் செய்யமாட்டேன். இது நிச்சயம். நான் கையேந்தி வாங்கியதற்குப் பலன் என் வயிற்றில் பிறந்த செல்வத்தை இழந்து தவிக்கவா முடிந்தது?...எனக்கு அப்படிப்பட்ட பிள்ளை வேண்டாம். என் கட்டை கடைத்தேறிவிட்டால் போகிறது. என்னைத் தொந்தரவு செய்து பின்னும் கொல்ல வேண்டாம்!" என்று கடினமான த்வனியில் உள்ளூற வேலை செய்யும் உணர்ச்சியுடன் அழுத்தமாகக் கூறினாள்.

இந்த வார்த்தைகள் மதுசூதனின் காதில் எப்படி விழாமலிருக்கமுடியும்? ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு பாணம் போல் சீறிக்கொண்டு வதைத்தது. ஸ்வீகாரம் வந்த பெருமையின் மகத்வத்தை எண்ணியெண்ணிப் பெருமூச்சுவிட்டான். பெத்தவர்

களுடன் இருந்தால் ஒரேவிதமான தொல்லையுடன் போயிருக்கும். இப்பொழுது மத்தளத்தைப்போல் இரண்டு விதமான சங்கடத்தி லல்லவோ அவஸ்தைப்பட வேண்டியிருக்கிறது. உம். தலைவிதி'' என்று தனக்குள் எண்ணிப் பெருமூச்சுவிட்டான். ஒரு காலத்தில் பிச்சைக்காரி பாடும்போது அமிருதம் பருகுவதுபோன்ற சுகத்தை யனுபவித்த மதுசூதனனின் உள்ளம் இன்று இருண்டு வரண்டு சூன்யமாகக் காணப்பட்டது. அதே பிச்சைக்காரி தனது வசீகர மான இனிய சாரீரத்தினால் மதுரமாரி பொழிவதுபோல்,

துணிவெளுக்க மண்ணுண்டு,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
தோல்வெளுக்கச் சாம்பருண்டு,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
மணிவெளுக்கச் சாணையுண்டு,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
மனம்வெளுக்க வழியில்லை,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

பிணிகளுக்கு மாற்றுண்டு,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
பேதைமைக்கு மாற்றில்லை,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
அணிகளுக்கொ ரெல்லையில்லாய்,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!
அடைக்கல மிங்குனைப் புகுந்தோம்,—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி!

123045

என்கிற பாரதியாரின் பாட்டை அதி மனோகரமாய்ப் பாடிக் கொண்டே வீதியுடன் சென்றாள்.

ஒருகாலத்தில் அந்த சங்கீதத்திற்கு அடிமையாகி, தேன் உண்ட வண்டுபோல் குதூகலித்த மதுசூதனன் இன்று அந்த கானத்தை ரஸிக்கவே இல்லை. நெஞ்சில் பெரும் பாறையைப்போல் அழுத்தும் அந்தகாரத்தில் இந்த கானமும் புகுந்து அழுந்தியது. சஞ்சல ஸாகரத்தில் மிதப்பதுபோல் தே[illegible] குழம்பிய நெஞ்சுக்குக் குதூகலம் காணமுடியுமா!

விளங்கியுள்ளவளுக்கு எப்படி இந்த ரஸத்தைப் பரிமாறியிருக்கக்கூடும் என்று அன்பர் யோசித்தால் அவருக்கே நன்கு புலப்படும். நான் முதலில் ஆரம்பித்தபடி மனோபாவங்கள் பலமாதிரியாக விருக்கலாம்.

இது நிற்க, நமக்கு எப்போதும் வரும் பாராட்டுக் கடிதங்களைவிட நமது பொன்விழா நாவலாகிய ஆத்மசக்திக்குத்தான் அதிகமான பாராட்டுக் களும், புகழுரைகளும் வந்தன. சென்ற இதழில் வெளியாகிய "பாட்டியின் பரிபாஷை" நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அதைப்பற்றி, முக்கியமாக பல சகோதரிகள் அன்புக் கடிதங்கள் எழுதியிருப்பதை நான் மிகமிக சந்தோஷத்துடன் வரவேற்கிறேன். விஷயம் வெகு சாதாரணமானதாயினும் அது எவ்வளவு சந்தோஷ உணர்ச்சியைக்கொடுத்திருக்கிறது என்பதை நினைக்க உள்ளம் பூரிக்கிறது.

ஒரு சகோதரி, "உங்கள் பாட்டியின் பரிபாஷையை எங்க பாட்டிக் குப் படித்துக்காட்டினேன். அவள் விழுந்து விழுந்து சிரித்துப் பின்னர், "என் வார்த்தெயே கேட்டுத்தான் அந்த கோதநாயகி எழுதிப்புட்டாளா என்ன ?" என்று கேட்டாள். அம்மணி! எங்க பாட்டியின் பரிபாஷையில் இன்னும் சில வேடிக்கைகள் இருக்கு. அதாவது, உங்க பாட்டி தர்மாமீட் டருக்கு, தர்மாட்டர் என்றாவது சொன்னாள். எங்க பர்ட்டி...தம்ராட்ட குச்சி...என்றுதான் இன்றும் நாளையும் கூறுகிறாள். பக்கேட் என்பதற்கு 'போக்கிட்டி' என்றும் வால்டாக்ஸ்ரோட், ஸால்ட்டுகொட்டார்ஸ் என்ப தற்கு 'வார்ட்டாஸ்ரோட்டு, ஷார்ட்டுகோட்டாய்' என்றும், கோல்டன்ஜூபிலி என்பதற்கு 'கோல்ட்டன்சுப்பளி' என்றும் சொல்வதைக் கேட்கச் சிரித்து வயிறு அறுந்துபோகிறது. அதையெல்லாம் உங்களுக்குத் தெரிவிக்கவேண்டு மென்று தோன்றியதால் இதை எழுதுகிறேன். நான் பாட்டியின் பரி பாஷையை வெகு ஸ்வாரஸ்யமாக ரஸிக்கிறேன். இந்த மாதமும் எதிர்பார்க் கிறேன்...ஒரு சகோதரர், "உங்கள் பாட்டிமட்டுந்தான் அப்படிப் பேசுவ தாக நீங்கள் நினைக்கவேண்டாம். எங்க தாத்தா, என் மனைவி, என் சகோதரிகூட இம்மாதிரி அற்புதமாகப் பேசுகிறார்கள். பாட்டியின் பரி பாஷையை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்" என்று எழுதியிருக்கிறார்.

இன்னொருவர், "எங்க பாட்டிக்கு உங்க பாட்டியின் பரிபாஷையைப் படித்துக் காட்டினேன். பொக்கைவாயைத் திறந்து சிரித்துவிட்டு, "அப்பா பட்டுக்களாஸாயிருக்கு" என்றாள். ஒங்க பாட்டியெபோலே வெஷ்ட்ளாஸ் என்று சொல்லவில்லை. பாட்டியின் பரிபாஷையை பாட்டி பிரமாதமாக ரஸித்தாள்" என்று எழுதியிருக்கிறார்.

இம்மாதிரி அநுபவத்தில் காணும் வியஷங்களுக்குள்ள ஒரு தனி ருசியும், மகிமையும், பொதுஜன விருப்பும், அலாதியானதல்லவா! இன் னும் சிலருடைய கடிதங்களையும் குறிக்கலாம். இடமில்லாததால் நிறுத்த வேண்டியிருப்பது பற்றி வருந்துகிறேன். கூடுமான வரையில் பாட்டியின் பரிபாஷையைத் தொடர்ச்சியாகப் பிரசுரிக்க முயற்சிக்கிறேன்.

வை. மு. கோ.

"JAGANMOHINI" Vol. XVII No. 9. Regd. No. M. 2210.

# கலப்பற்ற தேங்காயெண்ணெய்

## வாங்குங்கள்

டாடா அடையாளமுள்ள தேங்காயெண்ணெயே வேண்டுமென்று வற்புறுத்துங்கள். அது ஈ, அழுக்கு உள்ளே நுழையாதவண்ணம் நன்ருய் அடைத்த டப்பாக்களில் ஸீல் செய்து விற்கப்படுகிறது. பெரிய டப்பா வாங்குவது வெகு லாபகரம்.




## டாடா கம்பெனியாரின்
## தேங்காயெண்ணெய்

### முற்றிலும் கலப்பற்றதும் கைபடாததும்
### சுத்த சுதேசி

A TATA PRODUCT

½, 1½, 3, 36 ராத்தல் அளவுகளுள்ள டப்பாக்களில் விற்கப்படுகிறது.

**டாம்கோ விற்பனை இலாகா.,**

**19—A, வாணியர் தெரு, மதராஸ்.**

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
...OHINI" PRESS, 26, CAR STREET, TRIPLICANE, MADRAS.